பக்கங்கள்: 20

# தீம்புனல்
THEEMPUNAL
வாராந்தப் பத்திரிகை

தீ : 02 புனல்:42 11.02.2023 சனிக்கிழமை வள்ளுவர் ஆண்டு 2054



அமெரிக்காவை அச்சுறுத்திய
சீன உளவு பலூன்
வானதி
பக்கம்
02



துவண்டது துருக்கி
சிதைந்தது சிரியா
சிலம்பு
பக்கம்
11




உத்தமன்

# இனவாதப் பிக்குகளால் எரிகிறது நாடு

இலங்கையில் இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான சந்தர்ப்பங்கள் ஏற்பட்டபோதெல்லாம் அதனைக் குழப்பி நெருப்பாறை ஓடவிட்ட பிக்குகள் மீண்டும் நெருப்புடன் விளையாட ஆரம்பித்துள்ளதாக வடக்கு - கிழக்கு ஒத்துழைப்பு இயக்க ஒருங்கிணைப்பாளர் ராஜீவ் காந்த் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் குறிப்பிட்டார்.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி, இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி ஜேஆர்.ஜெயவர்தன ஆகியோரால் கையெழுத்திடப்பட்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் உருவாக்கப்பட்ட 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தப் போவதாக ஜனாதிபதி ரணில் அறிவித்துள்ளார். ரணிலின் அறிவிப்பை எதிர்த்த பௌத்த பிக்குகள் 13 ஆவது திருத்தச்சட்ட நகலை எரித்து ஆர்ப் பாட்டம் செய்தனர்.

பிக்குகளின் செயலைக் கண்டித்து வடக்கு - கிழக்கு ஒத்துழைப்பு இயக்க ஒருங்கிணைப்பாளர் ராஜீவ் காந்த் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில், “13 ஆவது திருத்தச்சட்டம் என்பது தமிழ் மக்களுக்கு குறைந்தபட்ச அதிகாரத்தை வழங்கக்கூடிய திருத்தச்சட்டம். தமிழ் மக்களால் நிராகரிக்கப்பட்ட திருத்தச்சட்டம். அந்த அதிகாரத்தைக்கூட வழங்க முடியாத தலைவர்கள், வழங்கக்கூடாது என்று நினைக்கிற இந்த இனவாதக் கூட்டம் தமிழ் மக்களுக்கு எதனை வழங்கப் போகின்றது. அரசியல் திருத்தச் சட்டத்தை பாராளுமன்றத்துக்கு முன்னால் எரிப்பது முற்று முழுதான இனவாத செயல் என்ற விடயத்தை நான் இங்கு கூறிக்கொள்கின்றேன் .இந்த இனவாத செயல்கள் தொடர்ந்தால் இந்த நாடு எந்தக் காலத்திலும் நிமிரமுடியாது.

இந்த நாட்டில் இருப்பது பொருளாதாரப் பிரச்சினை என்று நினைத்தீர்கள் என்று சொன்னால் அது முற்று முழுதும் தவறு. இந்த நாட்டில் இருப்பது இனவாதம். இந்த இனவாதத்தால்தான் இந்த நாடு நாசமாகி இருக்கின்றது. 1957 இல் இதேபோல் இனவாத பௌத்த பிக்குகள் இந்த நாட்டை நாசமாக்கியது முதற்படி பண்டா செல்வா ஒப்பந்தத்தை அவர்கள் எரித்தார்கள். ரணில் விக்கிரமசிங்க 90 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அரசியல் அமைப்பை எரித்தார். யாழ்ப்பாணத்தில் இருந்த நூலகம்கூட எரிக்கப்பட்டது. தமிழ் மக்களுடைய வீடுகள் எரிக்கப்பட்டது. சொத்துகள் சூறையாடப்பட்டன. இன்று தமிழ் மக்களுக்கு கிடைக்கக் கூடிய குறைந்தபட்ச அதிகார பகிர்வைக் கொண்ட அரசியல் அமைப்பை எரிக்கின்றனர். எனவே, இவர்கள் எரித்து எரித்து இந்த ஒட்டு மொத்த நாட்டையும் எரித்து நாசமாக்கி கொண்டிருக்கின்றனர் என்பதை சிங்கள மக்கள் முதலில் புரிந்து கொள்ள வேண்டும்” என்று தெரிவித்தார்.

# அமெரிக்காவை அச்சுறுத்திய சீன உளவு பலூன்

வானதி

அமெரிக்க, சீன உரசல்கள் உலகளாவிய ரீதியில் கவனம் பெற்றுள்ள நிலையில் சீன உளவு பலூன் புதியதொரு மோதலின் கதவைத் திறந்துள்ளது. அமெரிக்க வான்பரப்பில் சுற்றித் திரிந்த சீன உளவு பலூனை கடந்த 6 ஆம் திகதி அமெரிக்க விமானத்தால் சுட்டு வீழ்த்தப்பட்டது. வழமை போன்று சீனா இதற்கு கடும் கண்டனத்தைத் தெரிவித்துள்ளது.

அமெரிக்காவில் மொன்டானா மாகாணத்தில் அணு ஆயுத தளத்தின் மேலே இராணுவத்தின் முழுக் கட்டுப்பாட்டில் உள்ள பகுதியில் சந்தேகத்திற்கிடமான வகையில் வானில் பலூன் ஒன்று கடந்த 5 நாட்களாக சுற்றி வந்ததை அமெரிக்க அதிகாரிகள் கண்டுள்ளனர். அது சீனாவைச் சேர்ந்த உளவு பலூன் என அமெரிக்க அதிகாரிகள் கூறினர். இதையடுத்து அந்த பலூனை சுட்டு வீழ்த்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. ஐடாஹோ பகுதியில் இருந்து கரோலினாஸ் வரை தென்கிழக்கு திசையில் கடந்த 5 நாட்களாக பலூன் சுற்றி வந்துள்ளது. சுட்டு வீழ்த்த நடவடிக்கை எடுக்கப்பட்ட போதிலும், பலூன் அணு ஆயுத தளத்தின் மேலே பறந்ததால் சுட்டு வீழ்த்த முடியவில்லை.

உளவு பலூன் சுட்டு வீழ்த்தப்பட்டால் மக்களுக்கு பாதிப்பு ஏற்படக் கூடும் என்று கருதி அந்த முயற்சி கைவிடப்பட்டதாக இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர். பலூனை சுட்டு வீழ்த்த மாற்று வழிகளைக் கண்டு வந்ததாக தெரிவித்தனர். இந் நிலையில், பலூன் சனிக்கிழமை மதியம் அட்லாண்டிக் பெருங்கடல் பகுதிக்கு சென்ற நிலையில் தக்க நேரத்தில் சுட்டு வீழ்த்தப்பட்டது. லாங்லி விமானப்படை தளத்தில் இருந்து புறப்பட்ட போர் விமானத்தில் இருந்து ஒரே ஒரு ஏவுகணை மூலம் பலூன் சுட்டு வீழ்த்தப்பட்டது என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதையடுத்து பலூனின் உதிரிப்பாகங்களை கடற்படை மற்றும் கடலோர காவல்படை வீரர்கள் மீட்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர். உதிரிப்பாகங்களைக் கொண்டு ஆய்வு செய்ய அதிகாரிகள் திட்டமிட்டுள்ளனர். அமெரிக்கா பலூனை வீழ்த்தியது குறித்து சீன வெளியுறவு அமைச்சகம் கடுமையான அதிருப்தியையும் எதிர்ப்பையும் தெரிவித்துள்ளது. சீனா வெளியிட்டுள்ள அறிக்கையில், அந்த பலூன் சிவிலியன் விமானம். தவறுதலாக அமெரிக்கா எல்லைக்குள் வந்துள்ளது. இது முற்றிலும் தற்செயலானது என சீனா தெரிவித்துள்ளது.

இந்த வார இறுதியில் அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் அந்தோணி பிளிங்கன் சீனா செல்ல திட்டமிடப்பட்டிருந்தது. இந்த நிகழ்விற்குப் பிறகு சீனப் பயணம் தள்ளி வைக்கப்பட்டுள்ளதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

அமெரிக்க- ரஷ்ய பனிப்போர் காலகட்டத்தின் போது இது போன்ற பல பலூன்கள் பறந்த நிலையில், சீனாவின் பலூன் உளவு சேகரிப்பு கண்ணோட்டத்தில் பறந்தது அமெரிக்காவுக்கு பெரும் சீண்டலாக அமைந்தது.

சாதாரண வணிக வகை விமானங்கள் 65,000 அடி உயரம் வரை அதிகபட்சம் பறக்கும். ஆனால், சீனாவின் இந்த பலூன் 80,000 அடி முதல் 1,20,000 அடி வரை பறந்துள்ளது. இதை ரேடாரில் கண்டுபிடிப்பது கடினம். இந்த பலூன் அமெரிக்காவின் வடமேற்கு பகுதியில் மொன்டானாவில் உள்ள விமானப் படை தளவாடத்தின் மீது பறந்து சென்றதாகவும் அங்கு அமெரிக்க விமானத் தளங்கள் மற்றும் நாடு விட்டு நாடு பாயும் அணுசக்தி ஏவுகணைகள் 150க்கும் அதிகமாக இருப்பதாகவும் பாதுகாப்புத் துறை தெரிவித்தது.

வானிலை ஆராய்ச்சி என்ற பெயரில் உலகின் பல்வேறு பகுதிகளில் ஏராளமான உளவு பலூன்களை சீனா பறக்க விட்டிருக்கிறது. கடந்த ஜனவரி 28 ஆம் திகதி சீன உளவு பலூன், அமெரிக்க வான் பரப்பில் நுழைந்தது. இந்த பலூன் கடந்த 3 ஆம் திகதி அமெரிக்காவின் மான்டனா மாகாண பகுதிக்கு மேலே பறந்தது. அப்பகுதியில் உள்ள மால்ஸ்ட்ரோம் விமானப் படைத்தளத்தில் அமெரிக்காவின் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகள், அணு ஆயுதங்களைச் சுமந்து செல்லும் ஏவுகணைகள் நிலைநிறுத்தப்பட்டுள்ளன.




இந்த விமானப்படைத் தளத்தை உளவு பார்க்கவே அப்பகுதியில் சீன பலூன் பறக்க விடப்பட்டிருப்பதாக அமெரிக்க இராணுவ தலைமையகமான பென்டகன் குற்றம் சாட்டியது. இதை மறுத்த சீன வெளியுறவு அமைச்சகம், “சீன பலூன் வானிலை ஆராய்ச்சிக்காக பயன்படுத்தப்படுகிறது. வழிதவறி அமெரிக்க எல்லைக்குள் நுழைந்து விட்டது” என்று விளக்கம் அளித்தது. இந்த விளக்கத்தை அமெரிக்க அரசு ஏற்கவில்லை.

மூன்று பேருந்துகளின் அளவு கொண்ட சீன பலூன் ஹீலியம் வாயு, சூரிய எரிசக்தியில் பறக்கக் கூடியது. சுட்டு வீழ்த்தப்பட்ட பலூனின் பாகங்களை சேகரித்துள்ளோம். இப்போது வேறு எந்த தகவலும் வெளியிட முடியாது. இவ்வாறு அமெரிக்க விமானப் படை வட்டாரங்கள் தெரிவித்தன.



தைவானை சீனா ஆக்கிரமிக்க அமெரிக்கா தடையாக இருந்து வருகிறது. இந்தச் சூழலில் சீன உளவு பலூனை அமெரிக்கா சுட்டு வீழ்த்தியிருப்பது இரு நாடுகளிடையே பதற்றத்தை அதிகரிக்க செய்துள்ளது. உக்ரைன் - ரஷ்ய விவகாரத்தில் உக்ரைனுக்கு ஏராளமான உதவிகளை அமெரிக்கா செய்து வருகிறது. இதனால் சர்வதேச அளவில் அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் ஓரணியாகவும் ரஷ்யா, சீனா, வடகொரியா, ஈரான் உள்ளிட்ட நாடுகள் எதிரணியாகவும் செயல்படுகின்றன. இந்தச் சூழலில் சீன உளவு பலூனை அமெரிக்கா சுட்டு வீழ்த்தியிருப்பது இரு நாடுகளிடையே பதற்றத்தை அதிகரிக்கச் செய்திருக்கிறது. மேலும் 3 ஆம் உலகப்போர் குறித்த ஆபத்தும் அதிகரித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

“அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்”

கனகசபை கட்டடத் தொகுதி,
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
தொ.பே.: 0777 133 542
www.theempunal.com
news@theempunal.com

தீம்புனல் THEEMPUNAL

# போராட்டங்களால் அதிர்ந்த கொழும்பு

அரசாங்கத்தின் புதிய வருமான வரிக் கொள்கைக்கு எதிராக தொழிற்சங்கங்கள் மிகப்பெரிய போராட்டத்தை கொழும்பில் நடத்தின. 13 ஆவது அரசியல் திருத்தச் சட்டத்தை அமுல்படுத்தக் கூடாது என பௌத்த பிக்குகள் போராட்டம் நடத்தினர். இந்தப் போராட்டங்களை அடக்குவதற்கு பாதுகாப்புப் படையினர் குவிக்கப்பட்டனர்.

அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் (GMOA), இலங்கை மின்சாரசபை (CEB), பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், இலங்கை துறைமுக அதிகார சபை (SLPA), தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை (NWS&DB), பல வங்கிகள், இலங்கை விமானப் போக்குவரத்து உட்பட 40 இற்கும் மேற்பட்ட தொழிற்சங்கங்கள் அரசாங்கத்தின் புதிய வருமான வரிக் கொள்கையை எதிர்த்து கட்டுப்பாட்டாளர்கள் சங்கம் (SLATCA) மற்றும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் (CPC) இணைந்து இன்று நாடளாவிய ரீதியில் தொழிற்சங்கப் போராட்டத்தை முன்னெடுத்தன.

போராட்டம் வெற்றி பெற்றதாக போராட்டக்காரர்கள் அறிவித்தனர். ஆனால், மக்கள் பட்ட துயர துன்பத்தை அவர்கள் கணக்கில் எடுக்கவில்லை. தொழிற்சங்கப் போராட்டத்தினால் 1 பில்லியனுக்கும் அதிகமான நஷ்டத்தை இலங்கை எதிர்நோக்கியுள்ளதாக கொழும்பு பல்கலைக்கழகத்தின் பொருளாதாரப் பிரிவின் பேராசிரியர் பிரியங்க துனுசிங்க தெரிவித்தார்.

நெருக்கடியான தருணத்தில் நடைபெறும் போராட்டங்கள் தவறான சமிக்ஞைகளை வெளிப்படுத்தும் என பொருளாதார நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். இலங்கை தனது கடன் நிவாரணத்திற்காக சர்வதேச உதவியை நாடிய நேரத்தில் இவ்வாறான எதிர்ப்புக்கள் அதன் உலகளாவிய பங்காளிகளுக்கு தவறான சமிக்ஞையை அனுப்பியதாக மூத்த பொருளாதார நிபுணர் கூறினார். போராட்டங்களால் ஏற்படும் இழப்புகளை உடனடியாக ஈடு செய்ய முடியாது. 1000 இற்கும் மேற்பட்ட வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேறிவிட்டனர்.

அத்தியாவசியப் பொருட்கள், மருந்துகள், போன்றவற்றிற்கும் வரி விதிக்கப்படுகிறது. ஆடம்பரப் பொருட்களுக்கு விதிக்கப்படும் வரியால் ஏழைகள் பாதிக்கப்படமாட்டார்கள். வருமானத்துக்கு விதிக்கப்பட்ட வரியை தொழிற்சங்கங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. வரியில் திருத்தம் செய்யப்போவதாக அரசாங்கம் அறிவித்துள்ளது. வரியை முற்றாக நீக்க வேண்டும் இல்லையேல் போராட்டம் தொடரும் என தொழிற்சங்கங்கள் எச்சரிக்கை விடுத்துள்ளன.

1980 இல், அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தன, 40,000 இற்கும் மேற்பட்ட தொழிலாளர்களை பணிநீக்கம் செய்து பொது வேலை நிறுத்தத்தை நசுக்குவதில் வெற்றி பெற்றார். அவருக்கு பாராளுமன்றத்தில் ஆறில் ஐந்து பெரும்பான்மை பலம் இருந்தது, அப்போது எதிர்க்கட்சி மிகவும் பலவீனமாக இருந்தது. ஜெயவர்த்தன அரசாங்கத்துடன் அரசியல் நாடகம் ஆடிக்கொண்டிருந்த ஜே.வி.பி, பதினொன்றாவது மணி நேரத்தில் அந்த வேலைநிறுத்தத்தில் இருந்து விலகி, வேலை நிறுத்தக்காரர்களின் மன உறுதியை முடக்கியது. இன்று அப்படியான ஒரு நடவடிக்கையை எடுப்பதற்கு ஜனாதிபதி ரணிலால் முடியாது.

மூன்று தசாப்தங்களாக 13 எனும் இலக்கம் இலங்கை அரசியலை உலுக்குகிறது. 13 ஐ அமுல்படுத்தப் போவதாக ரணில் அறிவித்ததும், பிக்குகள் வீறு கொண்டு எழுந்துள்ளனர். இப்படி ஒரு எதிர்ப்பு கிளம்பும் அந்த எதிர்ப்புக்கு ஜனாதிபதி பணிந்து போவார் என்பது அரசியலின் அரிச்சுவடி. போராட்டங்களால் இலங்கையின் எதிர்காலம் கீழ் நோக்கிப் போகும் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. ■

# இலங்கையுடன் அதிக உறவுகளை ஏற்படுத்த பாகிஸ்தான் ஆர்வம்

வர்த்தகம், பொருளாதாரம் மற்றும் கல்வி ஆகிய துறைகளில் இலங்கைக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே அதிக ஒத்துழைப்பை மேம்படுத்துமாறு ஜனாதிபதி டாக்டர் ஆரிப் அல்வி வியாழக்கிழமை தெரிவித்துள்ளார்.

இரு சகோதர நாடுகளும் சுமூகமான உறவுகளை அனுபவித்து வருவதாகவும் அவை பரஸ்பர நலனுக்காக மேலும் விரிவாக்கப்பட வேண்டும் என்றும் அவர் கூறினார். இரு நாட்டு மக்களிடையே பரஸ்பர புரிதலை மேம்படுத்த உயர்கல்வி, கல்வித்துறை மற்றும் ஆராய்ச்சி ஆகிய துறைகளில் ஒத்துழைப்பை அதிகரிக்க வேண்டியதன் அவசியத்தை அவர் அடிக்கோடிட்டுக் காட்டினார். ஐவான்-இ-சதர் இல்லத்தில் இலங்கையின் சிரேஷ்ட அரச உத்தியோகத்தர்களின் பிரதிநிதிகள் குழுவுடன் கலந்துரையாடிய போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

தற்போது, இலங்கையின் 20 சிரேஷ்ட சிவில் ஊழியர்கள் சர்வதேச உறவுகள், சமாதானம் மற்றும் மூலோபாய ஆய்வுகள், பொதுக் கொள்கை, தலைமைத்துவம் மற்றும் முகாமைத்துவம் தொடர்பான இரண்டு வார பயிற்சித் திட்டத்தில் இஸ்லாமாபாத்தில் உள்ள தேசிய பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில் கலந்து கொள்கின்றனர். அதிகாரத்துவம் மக்களின் தேவைகளுக்குப் பதிலளிக்க வேண்டும், அமைப்பின் செயல்திறனை மேம்படுத்த வேண்டும், வேகமான வளர்ச்சியை உறுதி செய்வதற்கான அவர்களின் திறன் மற்றும் அறிவுத்திறன் ஆகியவற்றை ஜனாதிபதி வலியுறுத்தினார்.

வளரும் நாடுகள் கல்வி மற்றும் சுகாதாரத் துறைகளின் வளர்ச்சியில் கவனம் செலுத்த வேண்டும், மேலும் அவர்கள் எதிர்கொள்ளும் சவால்களை எதிர்கொள்ள விரைவான முடிவுகளை எடுக்கவேண்டும் என்று அவர் கூறினார். தகவல் தொழில்நுட்ப (IT) துறையின் அபிவிருத்திக்கான அறிவுசார் பாதைகளைக் கட்டியெழுப்புவதற்கு அதிகாரத்துவம் மற்றும் அரசியல்வாதிகள் வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களுக்கு ஏற்ப சரியான நேரத்தில் முடிவுகளை எடுக்கவேண்டும் என்று ஜனாதிபதி கூறினார்.

அறிவுசார் விளிம்பு நாடுகளை சிறந்ததாக்கியது, மேலும் அறிவுசார் பொருளாதாரங்களை வளர்ப்பதிலும் தங்கள் மக்களின் அறிவுசார் வளர்ச்சியில் முதலீடு செய்வதிலும் நாடுகள் கவனம் செலுத்தவேண்டும் என்றார். தகவல் தொழில் நுட்பத் துறையின் வளர்ச்சியில் கவனம் செலுத்துவதன் மூலமும் சாதகமான வணிகக் கொள்கைகளை பின்பற்றுவதன் மூலமும் வளரும் நாடுகள் விரைவான பொருளாதார வளர்ச்சியை அடைய முடியும் என்று அவர் கூறினார்.



இதற்கிடையில், உலகெங்கிலும் அமைதி, ஜனநாயகம் மற்றும் நிலையான வளர்ச்சியை மேம்படுத்துவதற்கு இன்டர்-பார்லி மென்டரி யூனியனின் ஜீரு உறுப்பு நாடுகளிடையே பாராளுமன்ற ஒத்துழைப்பை அதிகரிப்பதன் அவசியத்தை ஜனாதிபதி டாக்டர் ஆரிஃப் அல்வி வியாழக்கிழமை அடிக்கோடிட்டுக் காட்டினார். அமைதி, ஜனநாயகம், மனித உரிமைகள், இளைஞர்கள் அதிகாரமளித்தல், அரசியல் உரையாடல் மற்றும் பாராளுமன்ற நடவடிக்கை மூலம் நிலையான வளர்ச்சிக்காக பணியாற்றுவதற்கான <PC இன் பணிக்கான பாகிஸ்தானின் உறுதிப்பாட்டை அவர் மீண்டும் உறுதிப்படுத்தினார்.

ஐவான்-இ-சதர் இல்லத்தில், பாராளுமன்றங்களுக்கு இடையிலான ஒன்றியத்தின் தலைவர் டுவார்டே பச்சேகோவுடன் கலந்துரையாடிய போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

சர்வதேச சமாதானம் மற்றும் மோதல் தீர்வை மேம்படுத்துவதில் பாராளுமன்ற உறுப்பினர்கள் குறிப்பிடத்தக்க பங்கை வகிக்கமுடியும் என்று ஜனாதிபதி அல்வி கூறினார். போர்களை நிறுத்தவும் அமைதியை ஏற்படுத்தவும் உலக நாடுகள் கூட்டாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

உலக அமைதி மற்றும் செழுமைக்காக உலக நாடாளுமன்ற உறுப்பினர்கள் உழைக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார். பயங்கரவாதத்திற்கு எதிரான போரில் பாகிஸ்தான் ஆற்றிய பங்களிப்பு குறித்து ஜனாதிபதி அவர்கள் வருகை தந்த பிரமுகரிடம் விளக்கினார். பயங்கரவாதிகளுக்கு எதிரான நீண்ட போரின் போது, 100 பில்லியன் டொலர்களுக்கும் அதிகமான பொருளாதார இழப்பை சந்தித்ததுடன், ஆயிரக்கணக்கான பொது மக்கள் மற்றும் பாதுகாப்பு படை வீரர்களை பாகிஸ்தான் இழந்துள்ளது என்றார். ■

# பௌத்த தேசியத்துக்குள் அரசியலமைப்பு









அ.நிக்ஸன்

இலங்கை ஒற்றையாட்சி அரசியல் யாப்புக்குள் பௌத்ததேசியவாதம்.

இதுதான் இலங்கைத்தீவின் எழுதப்பட்ட அரசியல் விதி.

இந்த இரண்டும் ஒன்றுக்குள் ஒன்றாகக் குடிகொண்டிருக்கும் நிலையில், இலங்கைத்தீவில் அரசியல் நிம்மதிக்கு இடமில்லை.

இந்த உண்மை யைச் சிங்கள மக்கள் புரிந்துகொள்ள விரும்புவதில்லை.

அரசியல் யாப்பும் பௌத்த தேசியமும் ஒன்றுக்குள் ஒன்று குடிகொண்டிருப்பதை ஜே.வி.பி உள்ளிட்ட பிரதான சிங்கள அரசியல் கட்சிகள் பாதுகாக்கின்றன. சிங்கள ஊடகங்கள் அந்தப் பாதுகாப்புக்கு வழி சொல்லிக் கொடுக்கின்றன.

சிங்களத்தை மையப்படுத்திய ஆங்கில ஊடகங்கள் கொழும்பில் உள்ள வெளிநாட்டுத் தூதுவர்களுக்கு ஏற்ப அதனைக் கொஞ்சம் இராஜதந்திரமாக மாற்றியமைத்து இலங்கை ஒற்றையாட்சியை ஜனநாயகப் பன்முகத் தன்மை என்று கூறிப் பாதுகாக்கின்றன.

உதாரணம்- பதின்மூன்றை நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற தொனியைக் கொஞ்சம் நியாயப்படுத்தி அமெரிக்க - இந்திய அரசுகளை இந்த ஆங்கில ஊடகங்கள் சமாளிக்கின்றன.

இன்னுமொரு இராஜதந்திரமும் உண்டு.

அதாவது பெரும்பகுதி பௌத்த பிக்குகள் பதின்மூன்றை எதிர்க்க குறிப்பிட்ட சில பௌத்த பிக்குகள் பதின்மூன்றை நியாயப்படுத்திப் பேசுகின்ற அரசியல் தந்திரம்.

2004 இல் சுனாமிப் பொதுக் கட்டமைப்புக்கு எதிராக கொழும்பில் பிக்குகள் போராட்டம் செய்த அதேநேரம், பொதுக் கட்டமைப்பு அவசியம் என்று வலியுறுத்தி தமிழர்களுக்காக மற்றுமொரு பகுதி பௌத்த பிக்குமார் குரல் கொடுத்திருந்தனர்.

**இத்தந்திரத்தின் அரசியல் உள் நோக்கம் என்ன?**

அதாவது, இலங்கைத்தீவில் எது நடந்தாலும் பௌத்த பிக்குகள் சம்மதித்து அனைத்தும் நடக்க வேண்டும் என்ற இராஜதந்திரமே இது.

1920 இல் இலங்கைத்தேசிய இயக்கம் பிளவுபட்ட காலப் பகுதியில் இருந்து இன்றுவரை இத்தந்திரத்தைச் சிங்களவர்கள் நுட்பமாகப் பயன்படுத்தி வருகின்றனர். (இதற்கான ஆதாரங்கள் எனது அரசியல் கட்டுரைகளில் உண்டு)

பௌத்த பிக்குகள் வெவ்வேறாகப் பிரிந்து நின்று எதிர்ப்பதும் ஆதரிப்பதும் என்ற தந்திரத்தைப் பின்பற்றினாலும் அதற்குள்ளும் ஒரு அடிப்படை ஒற்றுமை உண்டு.

**அது என்ன அடிப்படை ஒற்றுமை?**

இலங்கை ஒற்றையாட்சியையும் அரசியல் யாப்பில் பௌத்த சமயத்துக்கு முன்னுரிமை என்பதையும் விட்டுக்கொடுப்பதில்லை என்பதே இந்த அடிப்படை ஒற்றுமை.

உதாரணம்- பதின்மூன்றை நியாயப்படுத்துகின்ற பௌத்த பிக்குமார், பதின்மூன்றை எதிர்க்கும் பௌத்த பிக்குகளுக்கு ஆதரவு. அதாவது, இந்த இரண்டு தரப்பும் இலங்கை ஒற்றையாட்சியைப் பாதுகாக்கின்றன.

எவ்வாறாயினும் அரசியல் யாப்பும் பௌத்த தேசியமும் ஒன்றுக்குள் ஒன்று நீண்டகாலத்துக்கு தொடர்ந்து குடிகொண்டிருக்க வாய்ப்பில்லை.

உடைந்து சிதைவதற்கான சந்தர்ப்பங்கள் அதிகமாக உண்டு. ஏனெனில் சிங்கள மன்னர்கள் தங்களுக்குள் தாங்களே அடிபட்டுக் காட்டிக் கொடுத்த வரலாறுகள் பௌத்த வரலாற்றுப் பாடநூல்களில் உண்டு.

ஆனால், துயரம் என்ன தெரியுமா?

தங்களைத் தாங்களே முற்போக்குவாதிகள் என்றும் மிதவாதிகள் எனவும் கூறிக் கொண்டும் திரியும் ஈழத்தமிழர்களில் சிலர் உடனடியாக முண்டு கொடுத்து பௌத்த தேசியம் உடைவதைக் காப்பாற்றி விடுவர்.

அவ்வளவு அரசியல் மனிதாபிமானம் உள்ளவர்கள் இந்த முற்போக்காளர்கள். மிதவாதம் என்று கூறுகின்ற தமிழ் அரசியல்வாதிகளிலும் அப்படிக் காப்பாற்றுகின்ற வருத்தம் உண்டு.

உதாரணம் 01- சரத்பொன்சேகாவுக்கு 2010 இல் வெள்ளையடித்து மக்களையும் வாக்களிக்கத் தூண்டினர்.

உதாரணம் 02- மைத்திரிபால சிறிசேனவுக்கு 2015 இல் வெள்ளையடித்து வாக்களிக்க வைத்தனர்.

உதாரணம் 03-2015 இல் நடந்த இலங்கைச் சுதந்திர தின வைபவத்தில் பங்குபற்றினர்.

உதாரணம்-04- ரணிலின் ஜனநாயக உரிமைக்காக 2018 இல் உயர் நீதிமன்றம் சென்றனர். அதாவது, 2015 இல் வெள்ளையடித்த மைத்திரிக்கு எதிராக வழக்குத் தொடுத்தனர்.

உதாரணம் 05- சஜித் பிரேமதாசவை 2020 இல் நியாயப்படுத்தினர்.

உதாரணம் 06- கோட்டாவுக்கு எதிராக 2022 இல் நடந்த காலிமுகத்திடல் போராட்டத்தைச் சிங்கள மக்களின் மனமாற்றம் என்று வர்ணித்தனர்.

உதாரணம் 07- சந்திரிக்காவைச் சிலர் ஜனநாயக வாதி என்று 2009 இற்குப் பின்னர் நியாயப்படுத்தி வருகின்றனர்.

ஆகவே, முற்போக்கு, மிதவாதம், மனிதாபிமானம் அல்லது நடைமுறைச் சாத்தியமான அரசியல் தீர்வைக் கோர வேண்டும், புலிகள் காலத்து அரசியல் சிந்தனையைக் கைவிட வேண்டும் என்று மார் தட்டுகின்ற சில ஈழத்தமிழர்களின் இயலாமை எழுத்துக்களினால், இலங்கை ஒற்றையாட்சி பலமடைகின்றது.

ஈழத்தமிழர்களின் அரசியல் விடுதலைக்கான கோரிக்கையை, தமிழ்த் தேசிய - தமிழர் வாழ்வியல் நாகரிகமாக அணுக வேண்டுமே தவிர, தனிப்பட்ட வன்மங்களோடும், தத்தமது விருப்பங்களுக்கு ஏற்றவாறும் தமிழ்த் தேசியக் கோட்பாட்டை மடை மாற்றக் கூடாது.

இலங்கை ஒற்றையாட்சி அரசியல் யாப்புக்குள் நின்றும் இலங்கை பாராளுமன்றத்தின் வழியாகவும் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வைக் காண முடியாது என்பதன் அடிப்படையில் எழுந்ததே தமிழ்த் தேசியக் கோட்பாடு.

அதற்குள் சாதி, மத, பிரதேச வேறுபாடுகள் கூட இல்லை. இதனை மையப்படுத்தியே தமிழ்த்தேசியக் கோட்பாடு என்பதன் வரைவிலக்கணம் மேலும் விரிவடையும்.

அப்படி விரிவாக்கம் செய்யும் போது முற்போக்கு, மிதவாதம், நடைமுறைச் சாத்தியம், நல்லிணக்கம், மனித உரிமை மீறல் என்ற தமிழ்த்தேசியத்தை நீக்கம் செய்வதற்கான சொல்லாடல்களுக்கு இடமளிக்க முடியாது.

ஆனால், தேசியம் பற்றிய இலக்குமாறாத மாற்றுச் சிந்தனைகள், மாற்றுப் பாதைகளுக்கான விமர்சனங்கள் தாராளமாக முன்வைக்கப்பட வேண்டும். ■

அவதானி




# சுதந்திரமடைந்து 75 வருடங்களின் பின்னரும் தொடரும் காட்சிகள்

சில வருடங்களுக்கு முன்னர் நல்லிணக்க ஆட்சி என்ற பெயரில் மைத்திரிபால சேனநாயக்க ஜனாதிபதியாகவும் ரணில் விக்கிரமசிங்க பிரதமராகவும் இராஜவரோதயம் சம்பந்தன் எதிர்க்கட்சித் தலைவராகவும் இருந்த போது காலிமுகத்திடலில் நடந்த சுதந்திர தின விழாவை, அண்மையில் கடந்த 04 ஆம் திகதி அதே திடலில் நடந்த 75 ஆவது சுதந்திர தின விழாவை ஒப்பு நோக்கியபோது, பல வேடிக்கைகளை அவதானிக்க முடிந்தது.

அன்று அந்த நல்லிணக்க அரசுடன் தேன் நிலவு கொண்டாடிய எமது தமிழ்த் தலைவர்களையும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரியையும் எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாசவையும் ராஜபக்ஷ குடும்பத்தினரையும் இம்முறை அங்கே காணமுடியவில்லை.

கடந்த 2022 ஆம் ஆண்டு அதே காலிமுகத்திடல், கோட்டா கோ கமவாகியிருந்தது. ஆயிரக்கணக்கான ஆர்ப்பாட்டக்காரர்கள் அறுபது நாட்களையும் கடந்து இரவு பகலாக பல்வேறு வடிவங்களில் தமது போராட்டத்தை முன்னெடுத்தனர். அதன் விளைவாக ஏற்பட்ட மாற்றங்களினால், கோட்டபாய ராஜபக்ஷ ஜனாதிபதி பதவியை விட்டே ஓடினார். பிரதமர் பதவி வகித்த மஹிந்த ராஜபக்ஷ, நிதியமைச்சர் பதவியிலிருந்த பசில் ராஜபக்ஷ, அமைச்சர் பதவியிலிருந்த புத்திரன் நாமல் ராஜபக்ஷ ஆகியோரும் பதவி விலக நேர்ந்தது.

பல வாரங்கள் ஆர்ப்பாட்டக்காரர்களின் கூடாரமாக விளங்கிய அதே காலிமுகத்திடலை, அவர்களினாலே நேர்ந்த அரசியல் மாற்றங்களினால், பின்கதவால் வந்து முதலில் பிரதமராகவும் பின்னர் ஜனாதிபதியாகவும் உயர்ந்த ரணில் விக்கிரமசிங்க எவ்வாறு மாற்றியமைத்துவிட்டார் என்பதற்கு அண்மையில் அங்கே நடந்த 75 ஆவது சுதந்திர தின விழா வரலாற்றில் இடம்பிடிக்கிறது.

சுமார் பதினெட்டு வெளிநாட்டு அமைச்சர்கள் கலந்துகொண்ட இந்த விழாவில் தனது அதிகாரத்தின் கீழ், எப்படி இருந்த காலிமுகத்திடலை எவ்வாறு மாற்றியிருக்கின்றேன் என்பதை அவர் நிரூபித்துள்ளார்.

தனது தற்போதைய அரசின் படைபலம் எத்தகையது என்பதை காண்பிக்க பல தசாப்த காலத்தின் படையணிகளின் ஊர்வலத்தையும் காண்பித்துவிட்டார்.

மும்மொழிகளிலும் அறிவித்தலை வழங்கச் செய்து, தொடக்கத்தில் சிங்களத்தில் தேசிய கீதத்தையும் இறுதியில் தமிழில் தேசிய கீதத்தையும் பாட வைத்து, தான் எத்தகைய நிலைப்பாட்டுடன் இருக்கின்றேன் என்பதையும் முழு உலகிற்குக் காண்பித்துவிட்டார் ரணில் விக்கிரமசிங்க.

அவருக்கு மரியாதை செலுத்துமுகமாக கரையிலிருந்து கடல் நோக்கி 21 பீரங்கி வேட்டுக்களும் தீர்க்கப்பட்டன. பாவம் கடல் வாழ் உயிரினங்கள்!

அதேவேளை வடக்கிலும் கிழக்கிலும் அரசுக்கு எதிராகவும் கிடைத்த சுதந்திரம் தமிழ் மக்களுக்கு இல்லை. அதனை கரிநாளாகவே அனுஷ்டிக்க வேண்டும் என்று தமிழ் மக்கள் கறுப்புக்கொடிகளுடன் பேரணியில் சென்றனர்.

நாட்டில் ஓரிடத்தில் சிங்கம் பொறிக்கப்பட்ட கொடிகளும் மற்றும் ஓரிடத்தில் கறுப்புக் கொடிகளும் பறந்தன. ஓரிடத்தில் இராணுவக் கவச வாகனங்களுடன் ஆயுதம் ஏந்திய படையினரின் ஊர்வலமும் மற்றும் ஓரிடத்தில் எமக்குரிய உரிமையைக் கொடு என்ற கோஷத்துடன் ஊர்வலமும் நடந்தது.

இலங்கை சுதந்திரம் பெற்று, 75 வருடகாலத்திற்குப் பின்னரும் இதுதான் இங்கே நிரந்தர காட்சியாகியிருக்கிறது. ஒரு நாட்டின் சுதந்திரம் என்பது அனைவருக்கும் பொதுவானதாக இருக்கவேண்டும்.

அவ்வாறு இல்லாதமையினால் வந்த வினைதான் இங்கே நீடித்த உள்நாட்டுப்போர். 2009 இல் போர் முடிவுக்கு வந்திருந்தாலும் பத்து ஆண்டுகளுக்குள் 2019 இலும் மக்களின் பாதுகாப்பிற்கு உத்தரவாதம் இல்லை என்பதற்கு சான்றாகிய சம்பவம்தான் கிறிஸ்தவ தேவாலயங்கள் மீது நடந்த மனித குண்டு தாக்குதல்.

அந்தத் தாக்குதல் நடப்பதற்கு முன்னர் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என்ற குற்றச்சாட்டு சுமத்தப்பட்ட முன்னாள் ஜனாதிபதிக்கு தண்டப்பணம் செலுத்துமாறு நீதிமன்ற உத்தரவு வெளியாகி, அவரும் பகிரங்க மன்னிப்புக் கோரியிருந்த காலப்பகுதியில் 75 ஆவது சுதந்திர தினக் கொண்டாட்டம் வந்தது.

இந்த நாட்டில் மூவினத்தையும் நான்கு மதத்தினரையும் சமமாக நடத்துகின்றேன் என்பதை வெளியுலகிற்கு - குறிப்பாக சுதந்திர தின விழாவுக்கு வருகை தந்த வெளிநாட்டு அமைச்சர்களுக்கு காண்பிக்க முயன்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

ஆனால், அவர் காண்பித்த அக்காட்சியின் ஒரு பக்கத்தை இந்தப்பதிவில் இடம்பெறும் படம் காண்பிக்கின்றது.

இந்து சமய, கத்தோலிக்க சமய, இஸ்லாம் சமய குருமார்கள் தேசிய கீதம் இசைக்கப்படும் போது எழுந்து நிற்கிறார்கள். ஆனால், ஒரு பௌத்த மதகுரு மாத்திரம் அமர்ந்திருக்கிறார்.

இலங்கை அரசியலை தீர்மானிக்கும் பெரிய சக்திகளாகத் திகழ்பவர்களும் இந்த பௌத்த பிக்குமார்தான் என்பதை இலங்கை விவகாரங்களுக்குள் மூக்கை நுழைக்கும் வெளிநாடுகள் தெரிந்து கொள்ளவேண்டும். இற்றைக்கு அறுபத்தியாறு வருடங்களுக்கு முன்னர் 1957 ஆம் ஆண்டு இலங்கை இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக அன்றைய பிரதமர் பண்டாரநாயக்கவும் தந்தை செல்வநாயகமும் ஒப்பந்தம் கைச்சாத்திட்ட போது அதனை எதிர்த்தவர்களும் கடும்போக்குவாதிகளான பௌத்த பிக்குகளே.

ஜே.ஆர்.ஜெயவர்தன, அத்தகைய கடும்போக்காளர்களையும் தம்முடன் இணைத்துக் கொண்டு, களனியிலிருந்து கண்டி தலதாமாளிகைக்கு பாத யாத்திரை புறப்பட்டார். இந்த பின்விளைவுகளினால், பண்டாரநாயக்க அந்த ஒப்பந்தத்தை கிழித்தெறிந்தார்.


இறுதியில் அவரும் ஒரு பௌத்த பிக்குவால்தான் சுடப்பட்டு மடிந்தார். தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வாகவும் அதிகாரப் பரவலாக்கத்திற்கு பொருத்தமாகவும் இலங்கை -இந்திய ஒப்பந்தத்திற்கு ஏதுவாகவும் உருவாக்கப்பட்ட 13 ஆவது திருத்தச்சட்டத்தை நடைமுறைப்படுத்த விடமாட்டோம் என குரல் எழுப்பி வருபவர்களும் உயர் பௌத்தபீடங்களைச் சேர்ந்தவர்களே!

நாட்டின் தேசிய கீதத்திற்கே எழுந்து நின்று மரியாதை செலுத்தத் தவறும் இந்த பௌத்த பிக்குகள்தான் நாட்டின் தலைவிதியை தீர்மானிக்கிறார்கள். இலங்கை சுதந்திரம் பெற்று 75 வருடங்களாகியிருக்கலாம். ஆனால், பேரினவாதம் தன்னை சுயவிமர்சனம் செய்துகொள்ளாத வரையில், இலங்கையில் எவருக்கும் சுதந்திரம் இல்லை என்பதையே காலம் உணர்த்திவருகிறது.

சிங்கக்கொடிகளும் கறுப்புக்கொடிகளும் சமாதானக்கொடிகளாகும் வரையில் எத்தனை சுதந்திர தினம் வந்தாலும் தேசிய கீதத்திற்குரிய மரியாதை இந்த பௌத்த பிக்குகளின் தரப்பில் இவ்வாறுதான் இருக்கும். ■



# தந்தூரா – ஆவணப்படத்தை முன்வைத்து நம் காலத்தை அளத்தல்




அருண் கண்ணன்

மேற்குக் கரையைச் சுற்றி எழுப்பப்பட்டுள்ள நிறவெறிச் சுவரின் சில இடங்களில் இஸ்ரேல் இராணுவத்தின் சோதனைச் சாவடி அமைக்கப்பட்டு பாலஸ்தீனர்கள் மற்ற பகுதிகளுக்குச் செல்ல அனுமதிக்கப்படுவார்கள். அப்படியான ஒரு சோதனைச் சாவடியில் கடந்த ஜனவரி 08 ஆம் திகதி அன்று நின்று கொண்டிருந்த கூட்டத்தில் ரியாத் அல்-மாலிகியும் இருந்தார். சாதாரண பாலஸ்தீன மக்களுக்கு இது தினசரி நடைமுறைதான் என்றாலும் ரியாத் அல்-மாலிகி தங்களுடன் நின்றது பலருக்கும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. இந்த ரியாத் அல்-மாலிகி சாதாரண பாலஸ்தீனப் பிரஜை அல்ல என்பதாலும் அவர் பாலஸ்தீன அரசாங்கத்தின் வெளியுறவுத் துறை அமைச்சர் என்பதும்தான் இந்த ஆச்சரியத்திற்கான காரணம்.

இஸ்ரேலில் புதிதாக பொறுப்பேற்றுள்ள தீவிர வலதுசாரி அரசு பாலஸ்தீன மக்களின் மீது கடுமையான ஒடுக்குமுறைகளை மேற்கொண்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக ரியாத் அல்-மாலிகின் சிறப்புச் சலுகைகள் ரத்து ரத்து செய்யப்பட்டுள்ளது. பாலஸ்தீன அரசாங்கத்தின் ஒரு உயர் பதவியில் இருப்பவருக்கே இதுதான் நிலைமை என்றால் சராசரி பாலஸ்தீன மக்களின் மீது இஸ்ரேல் அரசும் இராணுவமும் செலுத்தும் ஒடுக்குமுறையை நாம் எளிதாகப் புரிந்து கொள்ளமுடியும். கடந்த ஆண்டு மட்டும் இஸ்ரேல் இராணுவத்தால் 225 பாலஸ்தீனர்கள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். இந்த ஆண்டின் முதல் மாதத்தில் மட்டும் 35 பேர் கொல்லப்பட்டுள்ளனர். இப்படி அப்பாவி பாலஸ்தீனர்களை இஸ்ரேல் இராணுவம் சுட்டுக் கொல்வது ஒன்றும் புதிய செய்தியல்ல. கடந்த 75 ஆண்டுகளாக தொடரும் ஒரு சாதாரண நிகழ்வுதான்.

இஸ்ரேல் என்கிற நாடு 1948 ஆம் ஆண்டு பல ஆயிரம் அப்பாவி பாலஸ்தீன மக்களை படுகொலை செய்து அதன் இரத்தத்தின் மீதே உருவானது. அப்படியான படுகொலைகளை தாங்கள் செய்யவில்லை என்று இன்றுவரை இஸ்ரேல் அரசு மறுத்துவருகிறது. மேலும், அந்தப் படுகொலைகளை நிகழ்த்தியவர்கள் பின்னாளில் அந்நாட்டின் பிரதமர் உட்பட பெரும் பொறுப்புகளை வகித்தனர் என்பதுதான் இஸ்ரேலின் வரலாறு.

இப்படியான சூழலில் கடந்த ஆண்டு வெளியான இஸ்ரேலைச் சேர்ந்த இயக்குநர் அலோன் ஸ்வாரஸ் இயக்கிய தந்தூரா (Tantura) மற்றும் ஜோர்டான் நாட்டைச் சேர்ந்த டேரின் ஜேசல்லாம் இயக்கிய பர்ஹா போன்ற திரைப்படங்கள் 1948 ஆம் ஆண்டு நடைபெற்ற இஸ்ரேலின் இன அழிப்பு நடவடிக்கை குறித்து ஒரு விவாதத்தை உருவாக்கியது.

தந்தூரா என்கிற ஆவணப்படம் 1948 ஆம் ஆண்டு மே மாதத்தில் தந்தூரா கிராமத்தில் இருந்த பாலஸ்தீன அப்பாவி மக்களை யூத அமைப்பின் இராணுவப் பிரிவு கொன்றதையும் மேலும், பலரை வலுக்கட்டாயமாக கிராமத்தை விட்டு அப்புறப்படுத்தியதையும் மையமாக வைத்து எடுக்கப்பட்டுள்ளது. இஸ்ரேலை சேர்ந்தவர் இத்திரைப்படத்தை இயக்கியுள்ளது பலரது கவனத்தை ஈர்த்ததுடன் கடுமையான விமர்சனங்களும் திரைப்படம் குறித்து எழுந்துள்ளன. தமிழ்ச் சூழலில் தந்தூரா திரைப்படம் மற்றும் 1948 ஆம் ஆண்டுகளில் பாலஸ்தீன மக்களுக்கு ஏற்பட்ட அநீதிகளை உரையாட முயற்சிப்பது இன்றைய நிலையில் முக்கியமானதாகும்.

**பாலஸ்தீனம் அளிக்கப்பட்டு இஸ்ரேல் உருவானதன் சுருக்கமான வரலாறு**

முதல் உலகப்போரின் இறுதிப்பகுதியில் ஒட்டமான் பேரரசு வீழ்ச்சி அடைந்ததை அடுத்து மத்திய கிழக்கு பல கூறுகளாகப் பிரிக்கப்பட்டு ஏகாதிபத்திய நாடுகள் பங்கு போட்டுக் கொண்டன. இந்தப் பங்கீட்டில் 1917 ஆம் ஆண்டு பாலஸ்தீனம் ஆங்கிலேயர்களின் வசம் செல்கிறது. அன்று தொடங்கி 1948 இல் நாடு இரண்டாகப் பிரிக்கப்பட்டு இஸ்ரேல் உருவாக்கப்படும் வரை ஆங்கிலேயர்களின் வசம் தான் பாலஸ்தீனம் இருந்தது.

யூதர்களுக்கு என்று தனியாக ஒரு நாட்டை உருவாக்க வேண்டும் என்றும் அது தங்களுடைய புனிதத்தலமான ஜெருசேலம் அமைந்திருக்கும் பாலஸ்தீனத்தில் உருவாக்கப்பட வேண்டும் என்ற கருத்து சியோனிசவாதிகளால் 19 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் முன்மொழியப்பட்டதாக வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். இதன் ஒரு பகுதியாக 1901 ஆம் ஆண்டு யூத நெற்வேர்க் நிதி உருவாக்கப்பட்டு அதன் மூலமாக பாலஸ்தீன பகுதிகளில் நிலம் விலைக்கு வாங்கப்பட்டு யூதர்கள் குடியமர்த்தப்பட்டனர். 1900 இற்கு முன்பு 3000 இற்கும் குறைவாக இருந்த யூதர்களின் எண்ணிக்கை 1918 ஆம் ஆண்டு 50 ஆயிரமாக உயர்ந்தது. இந்த முயற்சிகள் ஆங்கிலேயர்களின் வருகைக்குப் பிறகு இன்னும் தீவிரப்படுத்தப்பட்டது. இதன் விளைவாக யூதர்களின் மக்கள் தொகை 1948 ஆம் ஆண்டில் 5 இலட்சத்தை எட்டியது. யூதர்களைப் பாதுகாக்க ஹகன்னா என்கிற இராணுவ அமைப்பு 1920 இல் உருவாக்கினர் சியோனிசவாதிகள். இந்த இராணுவ அமைப்புத் தான் பின்னாளில் மிகப்பெரிய அளவில் பாலஸ்தீனர்களைப் படுகொலை செய்தது.

ஆங்கிலேயே ஆட்சியின் அதிருப்தி காரணமாக பாலஸ்தீன மக்கள் ஆங்கிலேயர்களுக்கு எதிரான எழுச்சிமிக்க போராட்டத்தை 1936 இல் தொடங்கினர். இந்தப் போராட்டம் 3 ஆண்டு காலம் நடைபெற்றது. இதில் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பாலஸ்தீன மக்கள் கொல்லப்பட்டனர். இந்தப் போரில் ஆங்கிலேய இராணுவத்துடன் ஹகன்னா இணைந்து சண்டையிட்டது. இந்தச் சண்டைக்களம் ஹகன்னாவிற்கு பாலஸ்தீன கிராமப் பகுதிகளில் சண்டையிடுவதற்கான பயிற்சிக் காலமாக அமைந்தது. மேலும், இந்த சண்டையில் பாலஸ்தீன மக்களுக்கான தலைமை முற்றிலுமாக அளிக்கப்பட்டதுடன் போராட்டமும் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது.

சண்டை ஒரு புறம் நடந்து கொண்டிருந்தபோதே சியோனிசவாதிகளின் தலைவரும் இஸ்ரேலின் முதல் பிரதமராக இருந்தவருமான டேவிட் பென்-குரியன் ஆணைக்கு இணங்க 1937 இல் எளிமேலேச் திட்டம் என்று சொல்லப்படும் பாலஸ்தீனத்தை விட்டு ஆங்கிலேயர்கள் வெளியேறும் பட்சத்தில் இராணுவ நடவடிக்கையின் மூலம் எப்படி அதைக் கைப்பற்ற வேண்டும் என்கிற திட்டத்தை உருவாக்கினர். ஆனால், அவர்கள் எதிர்பார்த்ததைப்போல் ஆங்கிலேயர்கள் உடனடியாக வெளியேறவில்லை. பத்தாண்டுகள் கழித்து 1947 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம்தான் ஆங்கிலேயர்கள் பாலஸ்தீனத்தை விட்டு வெளியேறும் முடிவை எடுத்ததுடன் அந்நாட்டின் பிரச்சினையை புதிதாக உருவாக்கப்பட்ட ஐ.நா அவையிடம் ஒப்படைத்தனர்.

ஐ.நா சபையால் இதற்குத் தீர்வுகாண 11 பேர் கொண்ட குழு ஒன்று உருவாக்கப்பட்டது. பாலஸ்தீன மக்களின் கடும் எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் 6 மாத காலத்திற்குப் பிறகு இக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் நவம்பர் மாதத்தில் பாலஸ்தீனத்தைப் பிரித்து இஸ்ரேலை உருவாக்கும் தீர்மானம் ஐ.நா சபையில் முன்மொழியப்பட்டது. இந்தக் குழுவிற்கு மத்திய கிழக்கு குறித்து போதுமான அறிவு இல்லை போன்ற பல விமர்சனங்கள் இந்தக் குழு மீது வைக்கப்பட்டது. இருப்பினும், இந்தத் தீர்மானம் பெரும்பான்மையான நாடுகளின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டது. இதில் எதிரெதிர்த் துருவங்களாக இருந்த ரஷ்ய - அமெரிக்க உள்ளிட்ட நாடுகள் ஒன்றாக இணைந்து இதை ஆதரித்தன. ஏற்கெனவே யூதர்கள் மேற்குலகிலும் அமெரிக்காவிலும் தங்களுக்கு ஆதரவாக லாபி செய்திருந்தாலும் இரண்டாம் உலகப் போரில் இவர்கள் பாதிக்கப்பட்டதும் பெரும் எண்ணிக்கையில் கொல்லப்பட்டதும் பல நாடுகளின் ஆதரவை இவர்கள் பெறுவதற்கு உதவியாக இருந்தது.

**1948 இல் நடந்தது இன அழிப்பு நடவடிக்கை**

ஐ.நா சபைத் தீர்மானம் நிறைவேறப் பெற்றவுடன் பாலஸ்தீனத்தில் உள்நாட்டுக் கலவரம் நடக்கத் தொடங்கியது. இதைக்காரணமாக வைத்துக் கொண்டு ஹகன்னா அமைப்பினர் இராணுவ நடவடிக்கைகளைத் தொடங்கினர். மேலும், இதனுடன் ஆங்கிலேயர்களை அங்கிருந்து விரைவாக வெளியேற்றுவதற்கு ஆங்கிலேய இராணுவத்தின் மீதும் கடுமையான தாக்குதலை நிகழ்த்தியது யூதர்களின் இராணுவம். ஏற்கெனவே நன்கு திட்டமிட்டிருந்த இராணுவ நடவடிக்கைகளை தாக்குப் பிடிக்க முடியாமல் பாலஸ்தீன இராணுவம் பெரும் பின்னடைவைச் சந்தித்தது. பாலஸ்தீனர்களுக்கு ஆதரவாக சிரியா, எகிப்து, ஜோர்டன் போன்ற நாடுகளைச் சேர்ந்த படைகள் துணைக்கு வந்தன. இது ஒரு அளவிற்கு சேதத்தைக் குறைக்க பயன்பட்டதே ஒழிய யூத இராணுவத்தை முழுமையாக தடுத்து நிறுத்த முடியவில்லை.

1937 இல் எளிமேலேச் திட்டத்திற்குப் பிறகு வந்த ஆண்டுகளில் மேலும் இரண்டு திட்டங்கள் தீட்டப்பட்டன. இதையெல்லாம் மேன்மைப்படுத்தி 1948 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 10 ஆம் திகதி டேவிட் பென் கொரியன் தலைமயில் பிளான் டலேட் (Plan Dalet) என்று பெயரிடப்பட்ட பாலஸ்தீன மக்களை தங்களுடைய சொந்த மண்ணில் இருந்து வெளியேற்றிவிட்டு யூதர்களுக்கான தனிநாடாக இஸ்ரேலை உருவாக்க வேண்டும் என்பதற்கான திட்டம் இறுதி செய்யப்பட்டது. இந்தத் திட்டத்திற்காக உளவுப்பிரிவின் மூலம் பாலஸ்தீனத்தில் ஒவ்வொரு கிராமத்தைப் பற்றியும் பல நுட்பமான தகவல்கள் சேகரிக்கப்பட்டன.

அப்படி திரட்டப்பட்ட தகவல்களின் அடிப்படையில் பாலஸ்தீன பகுதிகளை 12 அலகுகளாகப் பிரித்த ஹகன்னா அமைப்பினர் அதில் சண்டையிடுவதற்கு 12 படைப்பிரிவுகளை உருவாக்கி முழுமையான போருக்குத் தயாராகி கொண்டிருந்தனர்.

அதேவேளையில் இவர்களின் தொடர்தாக்குதலின் காரணமாக ஆங்கிலேய இராணுவம் முழுமையாக மே மாதம் 14 ஆம் திகதி பாலஸ்தீனத்தை விட்டு வெளியேறியது.

உடனடியாக டேவிட் பென் கொரியன், இஸ்ரேல் என்கிற நாடு உருவானதாக அறிவித்தார். அடுத்த நாளே அமெரிக்க அதிபர் ஹாரி ட்ருமன் அதை அங்கீகரித்தார் அதனை ஒட்டிவந்த நாட்களில் பல நாடுகளும் இஸ்ரேலை அங்கீகரித்தன.



(07 ஆம் பக்கம் பார்க்க...)

# தந்தூரா – ஆவணப்படத்தை முன்வைத்து ........

(06 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

அதற்கு அடுத்த சில நாட்களில் இஸ்ரேலினால் ஏற்கெனவே நன்கு திட்டமிடப்பட்ட பிளான் டலேட்டின் அடிப்படையில் பாலஸ்தீனத்தையும் அதன் மக்களையும் அழிக்கும் வேலையைத் தொடங்கின.

இந்த இன அழிப்பு நடவடிக்கை ஜனவரி மாதம் 1949 வரை தொடர்ந்தது. இந்த நடவடிக்கையின் மூலம் 8 இலட்சம் பாலஸ்தீனர்கள் அகதிகளாக்கப்பட்டனர். 410 கிராமங்கள் முழுமையாக அழிக்கப்பட்டதுடன் 15,000 பேர் இதில் கொல்லப்பட்டனர். இப்படி அழிக்கப்பட்ட பல கிராமங்களில் ஒன்றுதான் தந்தூரா.

**தந்தூரா ஒரு அழகிய கடற்கரைக் கிராமம்**

ஹைபா நகரத்தின் தென்பகுதியில் 35 கிலோ மீற்றர் தொலைவில் இருக்கும் அழகான கடற்கரை கிராமம்தான் தந்தூரா. 1948 இல் 1500 பேர் மட்டுமே வாழ்ந்த ஒரு சின்னக் கிராமம். இது ஐ.நா சபையால் இஸ்ரேலுக்கு ஒதுக்கப்பட்ட பகுதியில் இருந்தது. மே 15 ஆம் திகதி யூத புலனாய்வு அதிகாரியின் மூலம் கிராமத்தின் முக்கியமானவர்களைச் சரணடையச் சொல்லி செய்தி அனுப்பப்பட்டது. தாங்கள் இந்தக் கிராமத்தில் வெளியேற்றப்படுவோம் என்பதன் அச்சம் காரணமாக சரணடைய மறுத்தனர். எனவே, மே 22 ஆம் திகதி இரவு தந்தூரா கிராமம் ஹகன்னா அமைப்பினரின் அலெக்ஸ்ன்றோனி படைப்பிரிவினரால் சுற்றிவளைக்கப்பட்டது.

அதற்கு அடுத்த இரண்டு நாட்களில் அந்தக் கிராமத்தைச் சேர்ந்த 250 இற்கும் மேற்பட்டவர்கள் படுகொலை செய்யப்பட்டனர். மேலும், ஒரு பெண்ணை மானபங்கம் செய்தது இராணுவம். அதைத் தடுக்கச் சென்ற அவருடைய வயதான மாமாவும் இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்படுகிறார். இறந்தவர்களின் பிணங்களைக் கடற்கரைக்கு அருகாமையில் புதைத்தது இராணுவம். அதனுடன் உயிர் பிழைத்தவர்களை அந்தக் கிராமத்தைவிட்டு வலுக்கட்டாயமாக வெளியேற்றியது இராணுவம். அதற்குப்பிறகு அந்தக் கிராமம் கனரக வாகனங்களைக் கொண்டு முழுமையாக அழிக்கப்பட்டு ஐரோப்பாவில் இருந்து பாதிக்கப்பட்டு வந்த யூதர்களை அந்தக் கிராமத்தில் குடியமர்த்தியது இஸ்ரேல் நிர்வாகம். இதுபோன்றுதான் மே மாதம் தொடங்கி ஜனவரி மாதம் 1949 வரை 6 மாத காலம் பல பாலஸ்தீன கிராமங்கள் ஹகன்னா இராணுவப் பிரிவினரால் அழிக்கப்பட்டதுடன் பலர் படுகொலையும் செய்யப்பட்டனர்.

இந்தப் படுகொலைகளின் மேல்தான் தங்கள் நாடு உருவாக்கப்பட்டது என்பதைத் தொடர்ந்து மறுத்து வருகிறது இஸ்ரேல். அதேபோல் பாலஸ்தீனர்கள் தாங்களாக அமைதியாக கிராமங்களை விட்டு வெளியேறினார்கள் என்றும் தொடர்ந்து பொய்ப் பிரச்சாரங்களையும் மேற்கொண்டு வருகிறது. அன்றே இதற்கு ஆதரவாக உலக அளவில் பிரபலமான பத்திரிகையாளர்கள் இஸ்ரேல் பகுதிக்கு அழைத்து வந்து ஊடகங்களில் அந்த பொய்ப் பிரச்சாரத்திற்கு ஆதரவாகச் செய்திகளை வெளியிட வைத்தனர் இஸ்ரேலியர்கள். இவர்கள் செய்த மிகப்பெரிய இனப்படுகொலையை மறைப்பதற்கு இது பேருதவியாக அமைந்தது.

**டெடி கேட்ஸின் ஆய்வு**

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னால் டெடி கேட்ஸ் (Teedy ketz) என்கிற ஹைபா பல்கலைக் கழகத்தில் படித்த மாணவன் தன்னுடைய முதுகலைப் படிப்பிற்காக ஹைபா பகுதியைச் சேர்ந்த 5 கிராமங்களைத் தேர்வு செய்து அக்கிராமங்களில் 1948 ஆம் ஆண்டு என்ன நடந்தது? என்பதை ஆய்வு செய்தார். அவர் அவ்வாறு தேர்வு செய்த கிராமங்களில் ஒன்று தந்தூரா. இந்த ஆய்விற்காக பாதிக்கப்பட்ட பாலஸ்தீனர்கள், போரில் ஈடுபட்ட அலெக்ஸ்ன்றோனி படைப்பிரிவினர் என மொத்தம் 135 நபர்களிடம் நேர்காணல் செய்தார் டெடி. அதைப்போல் அந்த நேர்காணல்கள் அனைத்தையும் ஒலிநாடாவிலும் பதிவுசெய்து கொள்கிறார். இது கிட்டத்தட்ட 140 மணி நேர ஓடியோ பதிவாக டெடியிடம் இன்றைக்கும் உள்ளது.

இந்த ஆய்வின் முடிவில் இஸ்ரேல் இராணுவம் வலுக்கட்டாயமாக பாலஸ்தீனர்களை கிராமங்களிலிருந்து வெளியேற்றியது என்றும் தந்தூரா கிராமத்தில் மட்டும் 250 இற்கும் மேற்பட்டவர்கள் படுகொலை செய்யப்பட்டனர் (பெரும்பாலானவர் ஆண்கள்) என்றும் எழுதி, அந்த ஆய்வை 1998 ஆம் ஆண்டு சமர்ப்பித்தார் டெடி. அந்த ஆய்வுக்காக அதிக மதிப்பெண் பெற்று தேர்ச்சியும் அடைந்தார்.

அதற்கு அடுத்த இரண்டு ஆண்டுகள் டெடியின் ஆய்வை இஸ்ரேலில் யாரும் பெரிதாக கண்டுகொள்ளவில்லை. 2000 ஆம் ஆண்டு பல்கலைக்கழக நூலகத்திற்குச் சென்ற பத்திரிகையாளர் ஒருவரின் கண்ணில் டெடி கேட்ஸ்ஸின் ஆய்வு படுகிறது. அடுத்த சில நாட்களில் அந்த ஆய்வை மையமாக வைத்து மரிவ் என்கிற பத்திரிகையில் செய்தி ஒன்றை வெளியிடுகிறார் அந்தப் பத்திரிகையாளர். இது இஸ்ரேலில் பெரும்புயலைக் கிளப்புகிறது. அலெக்ஸ்ன்றோனி படைப்பிரிவின் முன்னாள் இராணுவ வீரர்கள் தாங்கள் அதுபோல் சொல்லவில்லை என்று மறுத்ததுடன் டெடி மீது அவதூறு பரப்பியதாக வழக்கும் போடப்பட்டது. நீதிமன்றங்களில் டெடிக்கு எதிரான போக்கு நிலவியதுடன் பல வகையிலும் டெடி மற்றும் அவரது குடும்பத்தினர் மிரட்டப்படுகின்றனர். இந்த அழுத்தம் காரணமாக டெடி அந்த ஆய்வு தவறு என்று கடிதம் கொடுத்ததுடன் அதை வாப்பஸ் வாங்குவதாகவும் அறிவித்தார். மீண்டும் அந்த ஆய்வைச் சமர்ப்பிக்க அவருக்குப் பல்கலைக்கழகம் வாய்ப்பு வழங்கியது. முதலில் அழுத்தம் காரணமாக தன்னுடைய ஆய்வைத் தவறு என்று சொன்ன டெடி தன்னுடைய முடிவை மாற்றிக் கொண்டு பழைய மாதிரியே ஆய்வைச் சமர்ப்பித்தார். இந்த முறை மிகவும் குறைவான மதிப்பெண் வழங்கப்பட்டதுடன் அவருடைய ஆய்வும் நூலகத்தில் இருந்து தூக்கப்பட்டது. அதற்கு அடுத்த இருபது ஆண்டுகள் இதை யாரும் பெரிதாகக் கண்டுகொள்ளவில்லை. இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் இயக்குநர் அலோன் ஸ்வாரஸ்க்கு இது தொடர்பான தவல்கள் கிடைத்தவுடன் டெடியைச் சந்திக்கிறார். இந்தச் சந்திப்புதான் தந்தூரா என்கிற ஆவணப்படம் உருவாகக் காரணமாக அமைந்தது.

**தந்தூரா ஆவணப்படம்**

90 வயதைக் கடந்த, தந்தூராவில் வசிக்கும் யூதர் ஒருவரிடம் இருந்துதான் தந்தூரா படம் தொடங்குகிறது. படத்தின் முதல் சில நிமிடங்களில் அந்த முதியவருடன் மூன்று 90 வயதைக் கடந்த பெண்களும் உட்கார வைக்கப்பட்டு தந்தூராவில் 1948 இல் என்ன நடந்தது என்று வினவுகிறார் இயக்குநர். இந்த நான்கு நபர்களும்தான் ஜூன் மாதம் 1948 ஆம் ஆண்டு ஐரோப்பாவில் இருந்து வந்து தந்தூராவில் குடியேறியவர்களில் இன்றைக்கும் உயிருடன் இருப்பவர்கள். இவர்கள் தந்தூராவில் படுகொலைகள் எதுவும் நடக்கவில்லை என்று மறுப்பதுடன் படத்திற்கான டைட்டில் போடப்படுகிறது.

இந்தப் படம் பெரும்பாலும் டெடியின் ஆய்வை மையமாக வைத்துத்தான் நகர்கிறது. பக்கவாத நோயால் பாதிக்கப்பட்டுள்ள டெடி சக்கர நாற்காலியில் பயணிக்கும்போதே நமக்கு அறிமுகம் செய்யப்படுகிறார். அவருடனான நேர்காணலைத் தொடங்கும் இயக்குநர் உங்களுக்கு எப்போது சிரமம் ஏற்பட்டாலும் சொல்லுங்கள் நிறுத்திக் கொள்ளலாம். அதைப்போல் உங்களுக்கு என்ன நினைவிருக்கிறதோ அதைப் பகிர்ந்து கொள்ளுங்கள் என்று சொல்கிறார். அதற்குப் பதிலளிக்கும் டெடி தன்னை மூன்று முறை பக்கவாதம் தாக்கியுள்ளது என்றும் அதில் முதல் பக்கவாதம் ஏற்பட்டது இந்த ஆய்வு தொடர்பான நெருக்கடியின் விளைவாக என்று சொல்லும் பொழுது பார்வையாளர்களுக்கு டெடியின் நெருக்கடியை முழுமையாக உணரமுடிகிறது.

டெடியிடம் மேற்கொண்ட உரையாடலில் அந்த 140 மணி நேர ஆடியோ டேப் தன்னிடம் இப்போதும் இருப்பதை இயக்குநரிடம் கூறுகிறார். உடனே அதைப் பார்க்கலாமா? என்று வினவுகிறார் அந்த இயக்குநர். அதற்கு டெடி தாராளமாக என்று தன்னுடைய வீட்டில் ஒரு அறையைக் காண்பித்து இதில்தான் உள்ளது அதை நீங்கள் எடுத்து செல்லாம் என்கிறார். டெடியின் மனைவி குறுக்கிட்டு அந்த அறைக்குப் பெயர் “தந்தூரா அறை” என்றும் அந்த அறைக்குள் அந்த டேப் உட்பட தந்தூரா தொடர்பாக பல்வேறு ஆவணங்கள் உள்ளது என்றும் குறிப்பிடுகிறார். டெடிக்கு தந்தூரா மீதுள்ள ஆய்வின் ஆர்வத்தையும் ஆழத்தையும் நமக்கு விளங்கப்படுத்தவே இந்தக் காட்சிகள் அமைக்கப்பட்டுள்ளதாக தோன்றுகிறது.

அடுத்த கட்டமாக டெடி நேர்காணல் மேற்கொண்ட தற்போது உயிருடன் உள்ள சில அலெக்ஸ்ன்றோனி படைப்பிரிவின் முன்னாள் வீரர்களை மீண்டும் நேர்காணல் செய்கிறார் இயக்குநர். இதில் சிலர் நாங்கள் படுகொலைகள் எதுவும் செய்யவில்லை என்று மறுக்கின்றார். சிலர் ஆமாம் நாங்கள் பாலஸ்தீனர்களை சுட்டுகொன்றோம் என்று ஒப்புக்கொள்கின்றனர். அதில் ஒருவரிடம் நீங்கள் எத்தனை பேரைச் சுட்டுக் கொன்றிருப்பீர்கள் என்று வினவுகிறார் இயக்குநர். அதற்கு அந்த இராணுவ வீரர் எனக்கு கண்ணுக்குச் சரியாக தெரியவில்லை. ஆனால், என்னுடைய துப்பாக்கியில் 250 குண்டுகள் இருந்தன. அதைப் பயன்படுத்தி என்னால் எவ்வளவு பேரை சுட முடிந்ததோ அவ்வளவு பேரைச் சுட்டேன் என்பார். மேலும், இன்னும் ஒரு வீரர் இது யுத்தம். அதில் இது போன்ற கொலைகள் நடக்கத்தான் செய்யும் என்று கொலைகளை நியாயப்படுத்துவார். அவர்கள் கொலைகள் செய்ததை மறைக்கும்பொழுது ஒருவித பயத்துடன் சிரிக்கின்றனர். அந்த உடல் மொழி அவர்கள் கொலை செய்திருக்கலாம் என்பதை வெளிக்காட்டும் வகையில் அமைந்துள்ளது. மேலும், கொலைகள் நடைபெற்றதை உறுதி செய்ய அந்தக் காலகட்டத்தில் வாழ்ந்த மூன்று அரேபியர்களையும் நேர்காணல் செய்துள்ளார் இயக்குநர்.

டெடியின் ஆய்வைத் தாண்டி கல்வியாளர்களிடம் நேர்காணல் மேற்கொண்டு தந்தூராவில் என்ன நடந்துள்ளது என்பதையும் வெளிப்படுத்த முற்படுகிறார் இயக்குநர். டெடியின் ஆய்வைப் பற்றி பேசும் பேராசிரியர் ஒருவர் ஹிட்லர் எழுதிய மெயின் கேம்பே நம்முடைய நூலகத்தில் இருக்கும்பொழுது டெடியின் ஆய்வை நூலகத்தில் இருந்து நீக்கியது எவ்வளவு அபத்தமானது என்பதைச் சுட்டிக்காட்டுகிறார். இயக்குநர் நேர்காணல் மேற்கொண்ட பேராசிரியர்கள் சிலர் டெடியின் ஆய்வை மறுப்பதுடன் தந்தூராவில் படுகொலைகள் எதுவும் நடைபெறவில்லை என்று வாதிடுகின்றனர். மேலும், இந்நேர்காணலில் மிகவும் முக்கியமான வரலாற்று ஆய்வாளரான இலான் பாப்பேவின் நேர்காணலும் இடம் பெற்றுள்ளது. அவர் தந்தூராவில் பெரிய அளவில் படுகொலைகள் நடந்தது என்றும் அதேபோல் பாலஸ்தீன மக்களைப் படுகொலை செய்து அதன்மேல்தான் இஸ்ரேல் உருவானது என்பதையும் ஆணித்தரமாகக் கூறுகிறார்.

படத்தில் இரண்டு தரப்புகளையும் சமஅளவில் பிரதிபலிக்க வேண்டும் என்கிற ரீதியில் நேர்காணல்கள் மேற்கொள்ளப்பட்டதைப் போன்ற தோற்றம் இருந்தாலும் ஒரு கட்டத்தில் படத்தில் தந்தூராவில் படுகொலைகள் நடைபெற்றது என்பதைத் தெளிவாகப் புரியவைத்து விடுகிறார் இயக்குநர். மேலும், அந்தக் கிராமத்தில் கடற்கரைக்கு அருகாமையில் உள்ள கார் நிறுத்தும் இடத்தில்தான் படுகொலை செய்யப்பட்டவர்கள் புதைக்கப்பட்டுள்ளனர் என்பதையும் செயற்கைக்கோள் புகைப்படங்களைப் பயன்படுத்தி நமக்கு தெளிவுபடுத்திவிடுகிறார் இயக்குநர்.

பெரும்பாலும் பிரச்சினையின்றி எடுக்கப்பட்டுள்ள இந்தப் படத்தின் இறுதிப் பகுதியில் தீர்வு தொடர்பாக விவாதிக்கப்படும் விடயங்கள்தான் இந்தப் படத்தின் நோக்கத்தைச் சந்தேகிக்கும் படியாக அமைந்துவிடுகிறது. ஒரு பேராசிரியர் அமெரிக்கா, அவுஸ்திரேலியாவில் எப்படி தாங்கள் பூர்வக்குடிகளை கொன்றோம் என்பதை ஒத்துக்கொண்டார்களோ அதைப் போல் நாமும் இந்தக் கொலைகளை ஒத்துக்கொள்ள வேண்டும் என்கிறார்.

மேலும், படத்தின் முதல் சில நிமிடங்களில் காட்டப்பட்ட தந்தூராவில் ஐரோப்பாவில் இருந்து வந்து வசிக்கும் அந்த நான்கு முதியவர்களிடம் இங்கு இறந்தவர்களுக்கு ஒரு நினைவுச் சின்னம் அமைக்கக்கூடாதா? அல்லது ஒன்றை அமைக்கலாமா? என்பதைப் போன்ற உரையாடல் ஒன்றை நிகழ்த்துகிறார் இயக்குநர். முதலில் இதை வலுவாக மறுக்கின்றனர். அடுத்த சில நொடிகளில் அதில் ஒருவர் நான் மாறுபடுகிறேன். நினைவுச் சின்னம் அமைக்கலாம் என்கிறார். அதற்கு அடுத்த சில காட்சிகளில் இறந்தவர்களுக்கு நினைவுச் சின்னம் அமைக்கப்படுவதுடன் படம் முடிவடைகிறது.

படத்தினுடைய தொடக்கத்திலேயே 1948 இல் நடைபெற்றதைப் பொறுத்தவரை இஸ்ரேலுக்கு சுதந்திரப்போர் என்றும் பாலஸ்தீனர்களுக்கு அது நக்பா (ஆங்கிலத்தில் catastrophe) என்கிற வாசகத்துடன் முதல் காட்சியே தொடங்கும். ஆனால் படத்தின் இறுதிக் காட்சியில் எழுப்பப்படும் நினைவுச் சின்னத்தில் சுதந்திரப் போரில் உயிர் நீத்தவர்களுக்கு என்று குறிப்பிடப்பட்டிருக்கும். இதுவே இயக்குநர் எந்தப் பக்கம் நிற்கிறார் என்பதை நமக்கு தெளிவாக காட்டுகிறது. மேலும், நினைவுச் சின்னமெல்லாம் எங்களுக்கு தேவையில்லை. திரும்பவும் தங்கள் இடங்களுக்கே திரும்பிச் செல்லத்தான் விரும்புகின்றனர் பாலஸ்தீனர்கள். என்று பேசுவதன் மூலம் இயக்குநரின் அரசியல் நமக்கு தெளிவாகிறது.

1948 இல் நடைபெற்ற சம்பவங்களைப் பற்றி வந்த மிகச்சிறந்த படங்களின் பட்டியலில் 2008 இல் வெளி வந்த எலி சுலைமானின் “தி டைம் தட் ரிமைன்ஸ்” படத்துடன் பார்ஹாவைத்தான் நாம் சேர்க்கவேண்டியிருக்கிறது அதில் தந்தூரா இடம்பெற வாய்ப்பில்லை. ■

# வெந்த மனம்
# இன்னமும் தணியவில்லை

சூரன்

ஈழத்துத் திரைத்துறையில் ஆர்வமும் துடிப்பும் உள்ள மதிசுதாவின் “வெந்து தணிந்தது காடு” எனும் திரைப்படம் பற்றிய அறிப்பு வெளியானதும், தமிழகத்தில் இருந்தும் அதே பெயருடன் திரைப்பட அறிவிப்பு வெளியானது. தமிழகத்தின் பிரமாண்டத்தால் மதிசுதாவின் திரைப்படம் பாதிக்கப்படுமோ? என்ற அச்சம் ஒரு சிலருக்கு ஏற்பட்டது. ஒரு சில பஞ்சாயத்துடன் அந்தப் பிரச்சினை முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது. 12 நாடுகளில் 29 விருதுகளைப் பெற்ற மதிசுதாவின் “வெந்து தணிந்தது காடு” எனும் ஈழத்து சினிமா உலக அரங்கில் மகுடம் சூட்டியுள்ளது.

இலங்கைத் தியேட்டர்களில் வெந்து தணிந்தது காடு திரையிடும் அறிவிப்பு வெளியானது. அதனைப் பார்ப்பதற்கு பலரும் ஆர்வமுடன் இருந்தனர். அப்போது பேரிடியாக தடை ஒன்று போடப்பட்டது. அந்தத் தடையையும் தாண்டி ராஜா திரையரங்கில் வெந்து தணிந்தது காடு திரையிடப்பட்டது.

பாசமலர், துலாபாரம், மறக்க முடியுமா? போன்ற தமிழ்ப் படங்களைப் பார்த்த ரசிகர்கள் கண்ணீருடன் வெளியேறிய காலம் ஒன்று இருந்தது. அந்தக் காலத்தை வெந்து தணிந்தது காடு மீண்டும் நினைவுபடுத்தியது. படத்தைப் பார்த்துவிட்டு




வெளியே வந்த பலர் அடக்க முடியாமல் கண்ணீர் விட்டு அழுதனர்.

இறுதிக்கட்ட யுத்தத்தில் சிக்கிய தாய், மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகளைக் கொண்ட பெரிய குடும்பம் படும் துன்ப, துயரம். அந்தக் குடும்பத்தில் உள்ளவர்கள் எடுக்கும் முடிவுகள் என்ன? அவை ஏற்படுத்தும் தாக்கங்கள் எப்படியானவை என்பதை வெந்து தணிந்தது காடு உணர்வு பூர்வமாக வெளிப்படுத்தியுள்ளது. கைத்தொலைபேசியில் ஒரு காவியத்தை உருவாக்கி உள்ளார்கள்.

ஒரு குடும்பத்தைச் சுற்றிய கதை. 17 பாத்திரங்கள். 17 பேருக்கும் மிக முக்கிய பங்கு வழங்கப்பட்டுள்ளது. ஒரு பாத்திரத்தின் பங்களிப்பு முடிந்து விடும் என நினைத்தால் நினையாப் பிரகாரமாக அந்தப் பாத்திரம் இன்னொரு முறை வந்து தன்னை வெளிப்படுத்துகிறது.



இன்பம், துன்பம், காதல், நகைச்சுவை, உணர்ச்சி என ஒரு திரைப் படத்துக்குரிய சகல அம்சங்களும் உள்ளன. காத்திரமான வசனங்கள் சகல பாத்திரங்களையும் மெருகேற்றுகின்றன.

திரைக்கதை கனகச்சிதமாக உள்ளது. படத்தொகுப்பு ஆர்வத்தைத் தூண்டுகிறது. காட்சியமைப்பு, இசை என அனைத்தும் சிறப்பாக உள்ளன.

வசனமும் உச்சரிப்பும் இலங்கைப் படங்களில் உள்ள மிக மோசமான குறையாக விமர்சிக்கப்படுகிறது. அந்தக் குறையை வெந்து தணிந்தது காடு போக்கியுள்ளது. இந்திய சினிமா வேறு, இலங்கைச் சினிமா வேறு என்பதை படக்குழு உரத்துச் சொல்லியுள்ளது. எதுவுமே நாடகத் தன்மையாக இல்லாமல் இயல்பாக வெளிப்படுத்தப் பட்டுள்ளது. இறுதிக்கட்ட யுத்தத்தில் நடந்த அனைத்தும் மறைக்காமல் யதார்த்தமாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

நடிகர்கள் அனைவரும் தமது பாத்திரத்தை உணர்ந்து வாழ்ந்திருக்கிறார்கள். தாய்க்கிழவியாக நடமாடிய பார்வதி சிவபாதம் பண்பட்ட நடிகை என்பதை நிரூபித்துள்ளார். வண்டுவாக நடித்த சிவசங்கரின் நக்கல்கள் உயிருக்கு அஞ்சிய வேளையிலும் சிரிப்பலையை ஏற்படுத்தியது. இறுதிக்கட்ட யுத்த நேர திரைப்படம் என்பதால் ரசிகர்கள் எதிர்பார்த்த எவையும் அங்கு இல்லை. இராணுவம், புலிகள், தாக்குதல், இரத்தம், உயிரற்ற உடல், குற்றுயிரும் குலை உயிருமான காட்சிகள் எவையும் திரைப்படத்தில் இடம் பெறவில்லை. வெந்து தணிந்தது காடு படத்தைத் தயாரிப்பதற்கு 203 ஆர்வலர்கள் பங்களிப்பு வழங்கியுள்ளனர்.

ஒரு திரைப்படம் எப்படி இருக்கும் என்பது ரசிகர்களுக்கு அத்துப்படி. ஆரம்பம், கதை ஓட்டம், முடிவு போன்றவற்றை ரசிகர்கள் தமக்குள் தீர்மானிப்பார்கள். அந்த சம்பிரதாயங்கள் எல்லாம் உடைத்தெறியப்பட்டு புதியதொரு அத்தியாயத்தை மதிசுதா உருவாக்கி உள்ளார்.

Story, Screenplay, Dialogue, Direction, Producer, (மதிசுதா - கதை, திரைக்கதை, வசனம், இயக்கம், தயாரிப்பு - மதிசுதா)

DOP - Pratheepan Selvam, (காட்சிக் கவ்வல் - பிரதீபன் செல்வம்)

Editing - Manikandan A, (கத்தரித்து ஒட்டல் - மணிகண்டன் .A)

Music - Siva Pathmayan, (இசைச் செருகல் - சிவ பத்மயன்)

Sound Design - Subramanian K V, (ஒலிச் செருகல் - சுப்ரமணியன் K V)

Vfx - Vibishan Raveendran, (கணினிக் காட்சி உருவாக்கம் - விபிசன் ரவீந்திரன்)

Colorist - Dinindu Jagoda, (நிறக் கலவை - டினுந்து ஜேகொட)

Design - Sazi Balasingam, (வடிவமைப்பு - சசிபாலசிங்கம்)

Associate Director - Kishanth Sri, (துணை உதவி இயக்கம் - கிசாந் சிறீ)

Assist Director - Kuru TK, Kabeesan, (உதவி இயக்கம் - குரு TK, கபிசன்)

Continuity - Kowtham Maran, (தொடர் கண்காணிப்பு - கௌதம் மாறன்)

Online Editing - Steepan Sansigan, (களக் கத்தரிப்பு - ஸ்ரீபன் சன்சிகன்)

Camera Assist - Thanuvan, (காட்சிக்கவ்வல் உதவி - தனுவன்)

Production Manager - Jenosan Rajeswar, (தயாரிப்பு மனேஜர் - ஜெனோசன் ராஜேஷ்வர்)

Art Director - Newton, (கலை இயக்குநர் - நியூட்டன்)

Art & Production Supervisor - Vasi, (கலை மற்றும் தயாரிப்பு மேற்பார்வையாளர் - வசி)

Sound Mixing - Dawn Vincent, (ஒலிக்கலவை - டவுண் வின்செண்ட்)

Sound Editors -Akhil Hari, Piousmon Sunny, (ஒலிக்கத்தரிப்பு - அகில்ஹறி, பியஷ்மன் சணி)

Foley Artists - Akshay Sathe, Kaushik Bugdane, (ஒலி உருவாக்குநர் - அக்சை சதே, கௌசிக் பக்டன்)

Dubbing, - Jeyanthan Wicky, (குரல்பதிவு - ஜெயந்தன் விக்கி)

Recodist - Vaheesan, (தள ஒலிக் கவ்வல் - வாகீசன்)

Foley Studio - Bandish Studios, Pune (ஒலி உருவாக்க கலையகம் - பாண்டிஷ் ஸ்ருடியோ, பூனே

Special Thanks To - Piyush Shah, (ஒலிக்காய் நன்றி - பியூஷ் சா)

Lyrics - Akaramuthalvan, (பாடல்வரிகள் - அகரமுதல்வன்)

Singer - Paarvathy Sivapatham, (பாடகர் - பார்வதி சிவபாதம்)

Subtitle - S.pathmanathan, Nirojini Robert, (உபதலைப்பு - ச.பத்மநாதன், நிறோஜினி றொபேட்)

Arranged - Mathivathani, (அடுக்கல் - மதிவதனி)

Mobile Provider - Selvamurukan, Nakkeeran, (கைப்பேசிக் கடனாளர் - செல்வமுருகன், நக்கீரன்)

Filed Helpers - Sukirthan C, Ajay, (கள உதவி - சுகிர்தன் C, அஜேய்)

Food - Malar, (உணவு உபசரிப்பு - மலர்)

Paarvathy Sivapatham, பார்வதி சிவபாதம் (கிழவி), தர்மலிங்கம் (நாதன்), வசந்தசீலன் (சேகர்), வெற்றிச் செல்வி (பாக்கியம்), சுபாசினி (சிந்து), அருட்சோதி (குமாரி), நியூட்டன் (மூத்தவன்), விஷ்ணு (கமலன்), சந்திரா (சுமதி), திவாகர் (சுமன்), சிவசங்கர் (வண்டு), ஜனனி ( குழந்தையின் தந்தை), பிரியா (குழந்தையின் தாய்), W.ஜனத் திவங்கா (குழந்தை), விஜயரூபன் (ஜம்புலிங்கம்), திலக்சன் (மூர்த்தி), இவர்களுடன் மதிசுதா (மருத்துவ போராளி). ■



# மருத்துவத் தமிழ் முன்னோடி கிறீனை தமிழ் உலகிற்கு அறிமுகப்படுத்திய கவிஞர் அம்பிக்கு இம்மாதம் 94 வயது

25 முதல் சந்திப்பு

முருகபூபதி

மல்லிகை ஆசிரியர் டொமினிக்ஜீவாவுடன் 1973 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் ஒரு நாள் கொழும்பில் வெள்ளவத்தை பிரதேசத்தில் நடந்துகொண்டிருந்தேன்.

"இங்கே மெனிங் பிளேஸில், ஒரு கவிஞர் இருக்கிறார். வாரும் அவரைப்பார்த்துவிட்டு வருவோம்." என்றார் ஜீவா. அந்த வீட்டு வாசலில் எம்மை இன்முகத்துடன் வரவேற்றவர்தான் ஈழத்தின் மூத்த எழுத்தாளர் - கவிஞர் அம்பி.

அன்று முதல் எனக்கு மிகவும் பிரியத்திற்குரியவரானார்.


சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் அவரை நான் முதன் முதலில் சந்தித்தபோது, அவர் எனக்குத்தந்த அவரது முதல் நூல்தான் கிறீனின் அடிச்சுவடு. அமெரிக்காவிலிருந்து வட இலங்கைக்கு வருகை தந்து எமது மக்களுக்காக பணியாற்றிய தமிழ் மருத்துவ முன்னோடியான சாமுவேல் பிஸ்க் கிறீனின் வாழ்வையும் பணிகளையும் ஆய்வுசெய்த நூல். அதனை யாழ். இலக்கிய வட்டம் 1967 ஆம் ஆண்டு வெளியிட்டிருந்தது.




அப்போது இதன் விலை: இரண்டு ரூபா ஐம்பது சதம். 112 பக்கங்கள். இரசிகமணி கனகசெந்திநாதன் இந்த நூலின் பின்புற அட்டையில் கவிஞர் அம்பியை அறிமுகப்படுத்தியிருந்தார்.

இத்தனை வருடங்களுக்குப்பின்னரும் அம்பி அவர்கள், தொடர்ந்தும் தமிழ் மருத்துவத் தமிழ் முன்னோடி கிறீன் மற்றும் இரசிகமணி கனகசெந்தியின் நினைவுகளுடனேயே பயணித்து வருகிறார்.

தமது 38 வயதில் கிறீனின் அடிச்சுவடு எழுதியிருக்கும் கவிஞர் அம்பி, 1950 ஆம் ஆண்டு முதல் இலக்கியப் பிரதிகள் எழுதத் தொடங்கியவர். தொடக்கத்தில் சிறுகதைகள் எழுதியவர், பின்னர் கட்டுரை, கவிதை, ஆய்வு என தனது எழுத்துலகத்தை விரிவுபடுத்திக்கொண்டார். முன்னர் வடபுலத்திலிருந்து வெளியான ஈழகேசரி பத்திரிகையில் மாணவர்களுக்கான விஞ்ஞான பாடங்களையும் எழுதியவர். இலங்கை வானொலியும் இவரது விஞ்ஞானம் சார்ந்த ஆக்கங்களை ஒலிபரப்பியது.




தமிழ்நாடு சுபமங்களா இதழ், அம்பியை ஈழத்து கவிமணி தேசியவிநாயகம் பிள்ளை என வர்ணித்தது.

தற்போது அவுஸ்திரேலியா சிட்னியில் வதியும் கவிஞர் அம்பிக்கு இம்மாதம் 17 ஆம் திகதி 94 ஆவது பிறந்ததினம். இந்த வயதிலும் அம்பி எழுதினார். அவ்வாறு எழுதப்பட்ட அவரது சொல்லாத கதைகள் தொடரின் மின்னூல் வடிவம் அன்றைய தினம் மெய்நிகர் ஊடாக வெளியிடப்படுகிறது.




இந்நிகழ்வை அம்பி காப்பாளராகவிருக்கும் அவுஸ்திரேலியத் தமிழ் இலக்கிய கலைச்சங்கம் ஒருங்கிணைத்துள்ளது.

கடந்த பலவருடங்களாக ஏறினால் கட்டில் இறங்கினால் சக்கர நாற்காலி என தனது கடந்த கால வாழ்க்கையை நல்ல நினைவாற்றலுடன் நனவிடை தோய்ந்துகொண்டிருக்கும் அம்பி, இதுவரையில் எழுதியிருக்கும் நூல்களின் பட்டியலைப் பாருங்கள்:

கிறீனின் அடிச்சுவடு - ஆய்வு

அம்பி பாடல் - சிறுவர் பாடல்கள்

வேதாளம் சொன்ன கதை - மேடை நாடகம்)

கொஞ்சும் தமிழ் - சிறுவர் பாடல்கள்

அந்தச் சிரிப்பு

யாதும் ஊரே : ஒரு யாத்திரை

அம்பி கவிதைகள்

மருத்துவத் தமிழ் முன்னோடி

Ambi's Lingering Memories

Scientific Tamil Pioneer Dr Samuel Fisk Green

உலகளாவிய தமிழர்

A String of Pearls

பாலர் பைந்தமிழ்

Lingering Memories (ஆங்கிலம் மூலம் கற்கும் தமிழ்க்குழந்தைகளுக்கான கவிதை நூல்)

The World Wide Tamils

A String of Pearls

கவிஞர் அம்பி பெற்றுள்ள விருதுகள்

சென்னையில் 1968 இல் நடந்த உலகத்தமிழாராய்ச்சி மாநாட்டில் தங்கப்பதக்கம் விருது. 1993 இல் இலங்கை இந்து கலாசார அமைச்சின் 'தமிழ்மணி விருது 1992 இல் ஐந்தாவது உலகத்தமிழ் பண்பாட்டு மாநாடு சிட்னியில் நடந்தபோது பெற்ற விருது.

1994 இல் கொஞ்சும் தமிழ் சிறுவர் இலக்கிய நூலுக்கு இலங்கை தேசிய சாகித்திய விருது.

1997 இல் அவுஸ்திரேலியாவில் மெல்பன் 'நம்மவர்' விருது, 1998 இல் கனடாவில் தமிழர் தகவல் வழங்கிய சி.வை.தாமோதரம்பிள்ளை ஞாபகார்த்த தங்கப்பதக்கம் விருது.

2004 இல் அம்பியின் பவளவிழாவின்போது அவுஸ்திரேலியா தமிழ் இலக்கிய கலைச்சங்கம் வழங்கிய விருது. 2019 இல் அக்கினிக்குஞ்சு இணைய இதழ், அம்பியின் 90 ஆவது பிறந்த தினத்தில் வழங்கிய வாழ்நாள் சாதனையாளர் விருது.

இலங்கையில் மல்லிகை, ஞானம் ஆகிய இலக்கிய இதழ்கள் முகப்பில் அம்பியின் உருவப்படத்துடன் அவரது பணியைப் பாராட்டி கட்டுரை எழுதி கௌரவித்துள்ளன.

அம்பியின் வேதாளம் சொன்ன கதை கவிதை நாடகத்தை இலங்கையில் சுகேர் கமீட் இயக்கினார். ஏ.ரகுநாதன் நிழல் நாடக மன்றம் அதனைத் தயாரித்தது.

யாழ்பாடி என்ற வானொலிக் கவிதைநாடகம் இலங்கை வானொலியில் அப்துல் கமீட் தயாரித்து ஒலிபரப்பாகியது. அவுஸ்திரேலியாவில் அண்ணாவியார் இளைய பத்மநாதனின் அண்ணாவியத்திலும் அரங்கேறியது.



கொழும்பில் கார்த்திகா கணேசர் அம்பியின் நளதமயந்தி நாட்டிய நாடகத்தை (அன்னம் விடு தூது) அரங்காற்றுகை செய்தார்.

மலையக தோட்டத் தொழிலாளர்களின் வாழ்வையும் அம்பி, வேலம்மா என்ற கவிதையில் சித்திரித்துள்ளார். இக்கவிதை இசையுடன் இணைந்த நாட்டியமாகவும் அரங்கேறியுள்ளது.

அம்பியின் பவளவிழாவை முன்னிட்டு அவரது வாழ்வையும் பணிகளையும் சித்திரிக்கும் விரிவான ஆய்வு நூலை (அம்பி: வாழ்வும் பணியும்) 2003 ஆம் ஆண்டு எழுதியிருந்தேன்.

கடந்த 2019 ஆம் ஆண்டு அம்பிக்கு 90 வயது பிறந்தவேளையில் சிட்னி வாழ் மக்கள் பெருவிழா எடுத்துக் கொண்டாடினார்கள்.

தெல்லிப்பளை யூனியன் கல்லூரியில் முன்னர் விஞ்ஞான - கணித ஆசிரியராக பணியாற்றிய அம்பி, இக்கல்லூரியின் கீதத்தையும் இயற்றியவர் என்பதும் குறிப்பிடத்தகுந்தது. ■

# தெரிந்த சினிமா தெரியாத சங்கதி

**56**

கமல் நடித்த கல்யாணராமன் வெள்ளி விழாகொண்டாடிய படம். அதன் பாதிப்பில் இருந்து பல படங்கள் வெளியாகின ஆனாலும் கல்யாணராமன் போற்றப்பட்டதைப் போல ஏனைய படங்கள் போற்றப்படவில்லை. பஞ்சு அருணாசலத்தைச் சந்தித்த ராகவா லாரன்ஸ், கல்யாணராமன் படத்தின் கதையைத் தருமாறு வேண்டுகோள் விடுத்தார். பஞ்சு அருணாசலமும் ஒப்புக்கொண்டார். மறுநாள் பஞ்சு அருணாசலம் சந்தித்த ராகவா லாரன்ஸ் ஒரு கவரைக் கொடுத்தார். உள்ளே ஒரு தொகை இருந்தது. ஏன் என வினவிய போது, கல்யாணராமன் படக் கதைக்காக என்றார்.

அந்தக் காலத்தில் பஞ்சு அருணாசலத்தின் கல்யாணராமன் கதைபோல பல படங்கள் வெளிவந்தன.

யாருமே பஞ்சு அருணாசலத்திடம் அனுமதி வாங்கவில்லை. கல்யாணராமன் கதையை வைத்து ராகவா லாரன்ஸ் எடுத்த படத்தைப் பார்த்த பஞ்சு அருணாசலம் அதிர்ச்சியடைந்தார். கல்யாணராமன் படத்துக்கும் ராகவா லாரன்ஸின் படத்துக்கும் எந்த விதமான ஒற்றுமையும் இல்லை.

'கல்யாணராமன்' கதையை மையமாக வைத்து அவர் எடுப்பதாகச் சொன்ன 'முனி' மிகப் பெரிய வெற்றி. அடுத்து வந்த 'காஞ்சனா'வும் வெற்றி. 'பயந்த சுபாவம் உள்ள ஹீரோ' என்ற ஒரு விடயத்தைத் தவிர 'கல்யாணராமனு'க்கும் அவரின் படங்களுக்கும் எந்த ஒற்றுமையும் இல்லை. அந்த ஐடியாவை வைத்து எடுக்கலாம் என நினைத்து டெவலப் பண்ணும் போது, அது வேறு ஒரு கதையாக மாறிப் போயிருக்கிறது. 'என்னப்பா... என் பட ரைட்ஸை வாங்




கிட்டு வேறபடங்கள் எடுத்திட்டிருக்க?' என்றேன். 'கல்யாணராமன்' இன்ஸ்பிரேஷனை வெச்சு இன்னும் எத்தனை படங்கள் வேணும்னாலும் எடுக்கலாம்ணே' என்றார் லாரன்ஸ்.

தேவர் ஃபிலிம்ஸூல் வேலை தூயவனுக்கு வேறு வருமானம் இல்லை. ஃபைனான்ஸ் வாங்கி சொந்தப் படம் எடுப்போம் என முடிவு செய்திருந்தார். 'என்னை நீங்க டைரக்டராகப் போட்டீங்கன்னா, எப்படியும் 10 நாளாவது ரஜினி கால்ஷீட் வாங்கிட்டு வந்துடுவேன்' என்று கே.நட்ராஜ் சொல்லியிருக்கிறார்.

ஆங்கிலத் திரைப்பட விழாவில் பார்த்த ஒரு நல்ல கதை. அதை தமிழுக்குத் தகுந்த மாதிரி மாற்றி எழுதிய தூயவன் அதனை தமிழில் தயாரிக்க முயற்சி செய்தார். கதையைக் கேட்ட பஞ்சு அருணாசலத்துக்குத் திருப்தி இல்லை. 'ஃபெஸ்ட்டிவல்ல வந்திருக்கலாம். அதை இங்கிலீஷ் ரசிகர்களும் ரசித்திருக்கலாம். நம்ம ஊர்ல ஹீரோ ஒரு பொறுப்பை எடுத்துக்கிட்டார்னா, அதை அவர் சக்சஸ் பண்ணினாத்தான் அந்தப் படம் ஓடும். ஆனா, இதுல ஹீரோவின் ரசிகையாக வர்ற அந்தச் சிறுமியை அவரால் காப்பாற்ற முடியலைனு வந்தா, தமிழ்ல ஓடாது என்றார் பஞ்சு அருணாசலம்.

ஒரு ஃபைனான்ஷியரிடம் முதல் பிரதி அடிப்படையில் பேசி ஒப்பந்தம் போட்டார் தூயவன். அந்தப் படம்தான் 'அன்புள்ள ரஜினி காந்த்'.

ஒருகாலத்தில் துயவனிடம் உதவியாளராக பாக்யராஜ் வேலை செய்திருக்கிறார். அந்தப் ப்ரியத்தின் காரணமாக அவர் பாக்யராஜிடம், 'ஆரம்பத்தில இருந்தே தன்கூட இருக்கும் நட்ராஜூக்காக, ரஜினிகாந்த் 10 நாட்கள் கால்ஷீட் கொடுத்திருக்கார். அந்த மாதிரி நீ எனக்காக 10 நாட்கள் கால்ஷீட் தரக் கூடாதா?' என்று கேட்டிருக்கிறார். 'சரி தர்றேன். ஆனா, இந்தக் கதையில் எனக்கு வேலையே இல்லை. அதனால் படத்துக்குள் ஒரு ராமாவை வைத்து, அதில் நானும் ரஜினியும் நடிக்கிறோம். அந்த ராமாவையும் நானே எழுதித்தர்றேன்' என்று சொல்லியிருக்கிறார்.




பிறகு ஃபைனான்ஷியரிடம் தூயவன், 'நான் இப்படிக் கூடுதலான சில விடயங்களைச் சேர்க்கிறேன். படம் நல்ல விலைக்கு விற்கும். நீங்க முன்னாடி பேசினது தவிர, எனக்கு எவ்வளவு தருவீங்க?' எனக் கேட்டிருக்கிறார். 'இதுல பாக்யராஜூம் நடிச்சு, அவரே ஒரு போர்ஷனை டைரக்ஷன் பண்ணி, காமெடி எல்லாம் சேர்த்தால், நான் உங்களுக்கு கூடுதலா 5 லட்சம் ரூபாய் தர்றேன்' என்று அந்த ஃபைனான்ஷியர் சொல்லியிருக்கிறார்.

ஆனால், அதற்கான எந்த அக்ரிமென்ட்டும் கையெழுத்து ஆகவில்லை. படம் முடிந்து, ஃபர்ஸ்ட் காப்பி எடுத்துவிட்டார்கள். நான் எதிர்பார்த்ததைவிட படம் நன்றாகவே போனது. அந்த ஃபைனான்ஷியருக்கு 15 லட்சம் ரூபாய்க்கும் மேல் இலாபம். தூயவனுக்கு 5 லட்சம் தருவதாகச் சொன்னவர், தரவில்லை. கேட்டதற்கு, 'அக்ரிமென்ட்படி பணம் கொடுத்துட்டேன். அவ்வளவு தான்' என்று கையை விரித்துவிட்டார்.

நான் ஆரம்பத்திலேயே உங்களைத்தான் பண்ணச் சொன்னேன். நீங்க பண்ணியிருந்தீங்கன்னா, உங்களுக்கும் இலாபம் வந்திருக்கும் அதுல எனக்கும் ஒரு பங்கு , 'அடுத்து இப்ராஹிம் ராவுத்தரிடம் கேட்டிருக்கேன். 'விஜயகாந்த் கால்ஷீட் வாங்கி தர்றேன்'னு சொல்லியிருக்கார். இந்தப் படத்திற்காவது மறுக்காம உதவி பண்ணுங்க' என்றார். 'சரி' என நினைத்து, 'இயக்குநர் ஆர்.சுந்தர்ராஜன் படங்கள் வரிசையா நல்லாப் போகுதாம். அவர் எனக்குப் பழக்கம் இல்லை. உனக்கு அவரைத் தெரியுமா?' என்று பஞ்சு அருணாசலம் கேட்டார்.

பாக்யராஜ், சுந்தர்ராஜன் எல்லாரும் என் வீட்ல சுத்திக்கிட்டு இருந்தவங்கதான்' என்றார். 'சுந்தர்ராஜனிடம் கால்ஷீட் வாங்கிக் கூட்டிட்டு வா. அவர் டைரக்ஷன் பண்றதா இருந்தா, நான் உனக்கு ஃபைனான்ஸ் பண்றேன்'என பஞ்சு அருணாசலம் சொன்னார். சரி எனச்சொல்லிவிட்டு போன தூயவன் ஒருமணி நேரத்தினுள் ஆர்.சுந்தர்ராஜனுடன் பஞ்சு அருணாசலத்துக்கு முன்னால் நின்றார். பஞ்சு அருணாசலம் அதிர்ந்துவிட்டார். சுந்தர்ராஜன் எக்கச்சக்கமாக சம்பளம் கேட்கிறார். எல்லோருடனும் சண்டை பிடிக்கிறார் என கதை பரவியதால் எச்சரிக்கையான பஞ்சு அருணாசலம் எச்சரிக்கையானார். என்ன சம்பளம் எதிர்பாக்கிறியள்? எப்ப படத்தைத் தொடங்கலாம்? என நேரடியாகக் கேட்டார். 'நானும் ரெண்டு மூணு படங்கள் பண்ணிட்டேன். எல்லாம் சில்வர் ஜூப்ளி. அடுத்து, 'எனக்கு உனக்கு'னு சில பேர் படம் பண்ணச் சொல்லி அட்வான்ஸ் கொண்டு வந்தாங்க. எதையும் நான் வாங்கலை. வீடு வாங்கணும்னு எனக்கொரு ஆசை. அதுக்கு உதவி பண்ணீங்கன்னா, உடனே உங்களுக்கு படம் பண்றேன்' என்றார் சுந்தர்ராஜன்.

'சரி, ஒரு வீடு பாருங்க' என்றேன். 'ஏதாவது சந்தர்ப்பம் கிடைச்சா வாங்க வசதியா இருக்குமேனு கோடம்பாக்கத்தில ஒரு வீடு பார்த்து வெச்சிருந்தேன். இரண்டே முக்கால் ரூபாய் சொல்றாங்க. என்கிட்ட கொஞ்சம் பணம் இருக்கு. ரெண்டு ரூபாய் கொடுத்தீங்கன்னா வீடு வாங்கிடுவேன்' என்றார். உடனே ரெண்டு லட்சம் ரூபாய்க்கு ஒரு செக் எழுதிக் கொடுத்தார் பஞ்சு அருணாச்சலம். சுந்தர்ராஜன் சொன்ன கதை பஞ்சு அருணாசலத்துக்குப் பிடித்து விட்டது. சண்டை, காதல் இல்லாத சோக படத்துக்கு வியஜகாந்த் ஒப்புக்கொள்வாரா எனச் சந்தேகப்பட்டார். விஜயகாந்த் கதை கேட்க மாட்டார். ராவுத்தர்கிட்ட பேசுறேன் என்றார் தூயவன்.

ஆரம்பத்துல இருந்தே தாடி வெச்சுக்கிட்டு சோகப்பாட்டா பாடிட்டு இருந்தா எப்படிப்பா? என்று ராவுத்தர் சந்தேகமாகக் கேட்டிருக்கிறார். 'இப்படி கேட்பீங்கன்னு தெரிஞ்சுதான் பஞ்சு அண்ணன் அவர் கரன்டின்னு சொல்லச் சொன்னார். அவர் பொறுப்புல விடுவீங்களாம்' என்று சொல்லியிருக்கார். 'பஞ்சு சார் சொன்னா சரியா இருக்கும். அவர் எப்படிச் சொல்றாரோ அப்படியே பண்ணுங்க' எனச் சொல்லியிருக்கிறார் ராவுத்தர்.

வைதேகி காத்திருந்தாள் என்ற அந்தப்படம் தான் விஜயகாந்தின் வாழக்கையில் திருப்பு முனையை ஏற்றியது. இளையராஜாவின் இசை படத்திற்கு பெரும் பலமாக இருந்தது. தான் மெட்டமைத்த ஏழு பாடல்களும் ஒரு படத்தில் வர வேண்டும் என இளையராஜா விரும்பினார். ஒரு பாட்டை அல்லது இரண்டு பாடல்களைத் தரும்படி பலர் இளையராஜாவிடம் கேட்டனர். அவர் கொடுக்கவில்லை. ஏழு பாடல்களையும் வாங்கிய ஆர்.சுந்தர்ராஜன் பாடல்களுக்காக எழுதிய கதை தான் வைதேகி காத்திருந்தாள். ■



சிலம்பு



# துவண்டது துருக்கி

# சிதைந்தது சிரியா

கொடூரமான நிலநடுக்கத்தால் துருக்கியும் சிரியாவும் மிகமோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன. இந்த நூற்றாண்டின் மிகப் பெரிய பேரவலமாக இந்த பூகம்பம் கருதப்படுகிறது. மூன்று மிகப் பெரிய அதிர்வுகளும் நூற்றுக் கணக்கான சிறிய அதிர்வுகளும் துருக்கியையும் சிரியாவையும் சின்னாபின்னமாக்கி உள்ளன.

துருக்கியில் சிரியாவின் எல்லையை ஒட்டிய பகுதியில் திங்கட்கிழமை முதலில் 7.8 ரிக்டர் அளவிலும் இரண்டாவதாக 7.5 ரிக்டர் அளவிலும் மூன்றாவது முறையாக 6.0 ரிக்டர் அளவிலும் நிலநடுக்கம் பதிவானது. இதில் காசியான்டேப் சிரியா நாட்டின் எல்லையை ஒட்டி அமைந்துள்ளது. அந்த நகரம் மிகப்பெரிய சேதத்தை சந்தித்துள்ளது. ஓங்கி உயர்ந்து கட்டப்பட்டிருந்த கட்டடங்கள் மணல் மேடுகளாக மாறியுள்ளன. தொடர் நிலநடுக்கங்களால் நூற்றுக்கணக்கான கட்டடங்கள் சிதைந்து போயின. நகரமே உருக்குலைந்து போயுள்ளது. இடிபாடுகளில் சிக்கி பலர் மண்ணோடு மண்ணாக புதைந்து உயிரிழந்துள்ளனர். உயரமான கட்டடங்கள் சிதிலம் சிதிலமாக சிதறுவதைப் பார்க்கையில் மனது கனக்கிறது. துருக்கியிலும் சிரியாவிலும் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் 20 000 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். இந்தத் தொகை சுமார் 30 ஆயிரத்தை எட்டலாம் எனக் கருதப்படுகிறது. உலக சுகாதார அமைப்பின் கூற்றுப்படி, 23 மில்லியன் மக்கள் பூகம்பத்தால் பாதிக்கப்பட்டிருக்கலாம், பல சர்வதேச மனிதாபிமான அமைப்புகள் நன்கொடைகள் மற்றும் நிதிகளை நாடுகின்றன.

பூமிக்கு அடியில் 17 கிலோமீற்றர் ஆழத்தில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கத்தால் வடக்கு சிரியாவிலும் கடும் பாதிப்புகள் ஏற்பட்டன. அண்டை நாடுகளான ஜோர்டான், லெபனானிலும் இந்த நிலநடுக்கம் உணரப்பட்டன. 1 நிமிடம் நீடித்த இந்த சக்திவாய்ந்த இந்த நிலநடுக்கத்தால் கட்டடங்கள் இடிந்து பொதுமக்கள் இடிபாடுகளில் சிக்கிய நிலையில், அடுத்து 7.5 என்ற ரிக்டர் அளவில் 2 ஆவது முறையாக சக்திவாய்ந்த நிலநடுக்கம் பதிவானது. நிலநடுக்கத்தின் போது பதிவான சிசிடிவி காட்சிகள் வெளியாகி காண்போரை அதிர்ச்சியடையச் செய்து இருக்கிறது 3 ஆவது நிலநடுக்கம். திரும்பும் திசையெல்லாம் சிதைந்த கட்டடங்கள், அதில் சிக்கிய மனிதர்கள், இறந்து கிடக்கும் உடல் என இரத்த வாடையும் பிணக்குவியலுமாக காட்சி தருகிறது. இதற்கிடையே மூன்றாவது முறையாக 6 என்ற ரிக்டர் அளவில் மீண்டும் ஒரு நிலநடுக்கம் ஏற்பட்டு நிலைமையை மேலும் மோசமாக்கியது. இதனால் மீட்புப்பணிகளில் ஈடுபடுவதில் தொடர்ந்து பல்வேறு சிக்கல்கள் ஏற்பட்டன. 30 முறை நில அதிர்வு சக்திவாய்ந்த நிலநடுக்கங்களைத் தொடர்ந்து 30 முறை நில அதிர்வுகள் அந்நாட்டில் ஏற்பட்டு உள்ளதாக அமெரிக்காவின் புவியியல் ஆய்வு நிலையம் தெரிவித்து இருக்கிறது.

அடுத்தடுத்து ஏற்பட்ட அதிர்வுகளின் காரணமாக நிலநடுக்கத்தால் சேதமடைந்த, வெடிப்புகள் ஏற்பட்ட கட்டடங்கள் இடிந்து விழுந்து வருகின்றன. பூமிக்கு அடியில் வெறும் 10 கிலோ மீற்றர் ஆழத்தில் ஏற்படக்கூடிய ஆப்டர் ஷாக் எனப்படும் இந்த அதிர்வுகளால் பாதிப்புகள் மேலும் மோசமடையும் என்று அஞ்சப்படுகிறது. நிலநடுக்கத்தால் உயிரிழந்து இருக்கும் துருக்கி மற்றும் சிரியா மக்களின் குடும்பத்தினருக்கும் பிரதமர் மோடி, அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், பிரிட்டன் பிரதமர் உட்பட பல்வேறு உலக நாடுகளின் தலைவர்கள் இரங்கல் தெரிவித்து உள்ளதுடன், மனிதாபிமான உதவிகளை வழங்குவதாக உறுதியளித்துள்ளனர்.

சிரியாவில், ஒரு தசாப்தகால அமைதியின்மையின் போது ஷெல் மற்றும் வான்வழித் தாக்குதல்களின் சுமைகளைத் தாங்கிய கட்டடங்களின் அடித்தளத்தை பூகம்பம் மற்றும் அடுத்தடுத்த நிலநடுக்கங்கள் மேலும் வலுவிழக்கச் செய்தன. துருக்கிய எல்லையில் வசிக்கும் பலர் ஏற்கெனவே பலமுறை இடம்பெயர்ந்துள்ளனர். ஒரு தசாப்தத்திற்கும் மேலாக போர் மற்றும் வறுமையால் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள ஒரு பிராந்தியத்தில், இந்தப் பகுதி தனிப்பட்ட முறையில் பாதிக்கப்படக்கூடியது மற்றும் இந்த அளவிலான பேரழிவைச் சமாளிக்க முடியவில்லை.

காசியான்டெப்பில் நிலநடுக்கத்தின் மையப்பகுதியிலிருந்து சுமார் 20 மைல்கள் தொலைவில், மக்கள் வணிக மையங்கள், மசூதிகள், அரங்கங்கள் மற்றும் சமூக மையங்களில் தஞ்சம் புகுந்தனர்.

சிரியாவில் கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதியில், சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்படுவதற்கு முன்பே நான்கு மில்லியன் மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். மேலும் பலர் இராணுவ குண்டுவீச்சுகளால் இடிந்த கட்டடங்களில் வாழ்கின்றனர். ஒரு காலத்தில் அலெப்போவில் ஒரு பலமாடிக் கட்டடம் இருந்த இடத்தில் கொங்கிரீட் மற்றும் எஃகு சாலைகளின் ஒரு மேடு கிடந்தது.

இடிந்து விழுந்த கட்டடங்களின் இடிபாடுகளில் இருந்து மக்களைத் தோண்டி எடுக்க கடினமான சூழ்நிலையில் பணிபுரியும் மீட்புக்குழுவினர் போராடினர்.

பேரழிவின் அளவு இன்னும் தெளிவாகத் தெரியாததால், இறப்பு எண்ணிக்கை கணிசமாக உயரக் கூடும். ஐக்கிய நாடுகள் சபையின் அதிகாரி ஒருவர் கூறுகையில், ஆயிரக்கணக்கான குழந்தைகள் கொல்லப்பட்டிருக்கலாம் என அஞ்சப்படுகிறது. துருக்கி மற்றும் வடக்கு சிரியாவில் உள்ள நகரங்களில் பல்லாயிரக்கணக்கான மக்கள் காயமடைந்தனர் அல்லது வீடிழந்துள்ளனர்.

குளிர்கால காலநிலை மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளுக்கு இடையூறாக உள்ளது மற்றும் வீடற்றவர்களின் அவல நிலையை மேலும் மோசமாக்கியுள்ளது. சில பகுதிகளில் எரிபொருள் மற்றும் மின்சாரம் இல்லாமல் இருந்தது. சுமார் 12 ஆண்டுகால உள்நாட்டுப் போருக்குப் பிறகு ஏற்கெனவே மனிதாபிமான நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள சிரியாவின் நிலைமை குறித்து உதவி அதிகாரிகள் குறிப்பாக கவலை தெரிவித்தனர்.

செவ்வாயன்று எர்டோகன் 10 துருக்கிய மாகாணங்களை பேரழிவு மண்டலமாக அறிவித்து அங்கு மூன்று மாதங்களுக்கு அவசரகால நிலையை விதித்தார். புதிய சட்டங்களை இயற்றுவதில் பாராளுமன்றத்தை புறக்கணிக்கவும் உரிமைகள் மற்றும் சுதந்திரங்களை மட்டுப்படுத்தவும் அல்லது இடைநிறுத்தவும் இது அரசாங்கத்தை அனுமதிக்கும்.

( 19 ஆம் பக்கம் பார்க்க...)

தொடர்கதை

# இரு மலர்கள்

மலர் 13

யாழ் சத்யா





காதலெனும் தேர்வெழுதி

அன்று மாலையிலும் சந்திர ஹாஸனே வந்து இருவரையும் வீட்டுக்கு அழைத்துச் சென்றார்.

அவர்கள் வருகைக்காகவே காத்திருந்த அருண்யா அவர்கள் காரை விட்டு இறங்க முதலே பரபரத்தாள்.

“அக்கா... ராக்கிங் எல்லாம் என்ன மாதிரி? என்ன செய்யச் சொல்லி கேட்டவங்கள்? ஏதும் பேசினவங்களோ? நீ அழுதியா? அஞ்சலி அக்காவை என்ன கேட்டவங்கள்?”

மூச்சு விடாமல் படபடத்தவளை தெய்வ நாயகியின் குரல் அடக்கியது. “ஒழுங்காக படிச்சுப் பாஸ் பண்ணி கம்பஸ்க்குப் போனால் உன்னையும் ராக்கிங் பண்ணுவாங்கள். என்ன கேப்பாங்கள் என்று உனக்கே அப்பேக்க தெரிய வரும். அதை விட்டிட்டு களைச்சு விழுந்து வாறவளை உள்ளேயும் வர விடாமல் வாசலில வைச்சே வம்பளக்கிறாய். டேர்ம் டெஸ்ட் தொடங்கப் போகுது. இந்தப் பிள்ளைக்கு எப்பவாச்சும் படிப்பு நினைப்பு வருதே. எந்த நேரமும் வம்புக்குத்தான் அலையுறது. உன்னைப் பெத்த நேரத்துக்கு ஒரு தென்னம்பிள்ளையை பெத்து வளத்திருந்தாலும் இந்நேரத்துக்கு காய்ச்சிருக்கும். ஒரு வீட்டு வேலை செய்யத் துப்பில்லை. புதினமறிய வந்திட்டா பெரிய மனுசி.”

அருண்யா தேங்காய் துருவித் தர மாட்டேன் என்ற கோபத்தை தன் அர்ச்சனை மூலம் வெளிப்படுத்தினார் அவள் அன்புத் தாயார். வாயை வைத்துக் கொண்டு சும்மா இருந்தால் அருணிக்குத்தான் அன்றைக்கு தூக்கம் வராதே.

“ஏனணை... உங்கட குணம்தானே எனக்கும் வரும். நீங்கள் பக்கத்து வீட்டு சாந்தி அக்காவோட கோயிலுக்கு யார் எந்த நகை போட்டு வந்த? எந்த சாரி கட்டி வந்த? என்று கதைப்பியளே அதுக்குப் பேர் வம்பில்லாமல் என்னவாம்? தோட்டத்தில வைச்ச தென்னை மட்டும் ஏதோ காய்ச்சுக் கொட்டுதாக்கும்... ஏதோ நான்தான் என்னைப் பெறுங்கோ என்று இவாட்ட வந்து கெஞ்சின மாதிரி ஒரு கதை எப்ப பாத்தாலும்...” என்று சுடு சட்டியில் போட்ட பொப்கோர்னாக பொரிந்தவள் தந்தையிடம் திரும்பி,

“அப்பா! நீங்கள் பேசாமல் இந்த மனுசிய டைவேர்ஸ் பண்ணிடுங்கோ. எப்ப பாத்தாலும் என்னை ஏசின படி... மனுசரை ஒரு நிமிடம் நிம்மதியா இருக்க விடாமல் ஒரே ஆக்கினை... நான் உங்களுக்கு வேற நல்ல பொம்பிளையாப் பாத்துக் கட்டி வைக்கிறன்...” என்றாள்.

இதற்கு பதில் கூறி மனைவியிடம் மண்டகப்படி வாங்கத் தயாராக இல்லாத சந்திரஹாசன் வழக்கம்போல சிரிப்புடன் “நீயாச்சு உன் அம்மாவுச்சு” என்று கூறி விட்டு உள்ளே போய் விட்டார். கவியும் உள்ளே சென்றுவிட தாயில் இன்னும் கோபம் அடங்காதவளாய் வாயில் படியிலேயே அமர்ந்து விட்டாள் அருண்யா.

“பொழுது படுற நேரத்தில வாசலில இருந்து என்ன பராக்கு பார்க்கிறாய் போய் படி பாப்பம்”

திரும்பவும் அவளைக் கண்டித்து விட்டு உள்ளே சென்றார் தெய்வநாயகி. அவர் செல்லும் வரை காத்திருந்து விட்டு நேராக கவியின் அறைக்கு சென்று கிணற்றடியில் குளிக்க சென்றவளின் வருகைக்காக காத்திருந்தாள்.

குளித்து முடித்து இலகுவான பருத்தி இரவுடையுடன் வந்த கவி துவாயை தாங்கியில் போட்டு விட்டு இவளருகே கட்டிலில் வந்தமர்ந்தாள்.

“ப்ளீஸ் அக்கா... அந்த மனுசி திரும்ப கத்த முதல் என்ன நடந்த என்று கெதியா சொல்லு... தெரியாட்டில் எனக்கு மண்டையே வெடிச்சிடும்”

தங்கையின் குணம் அறிந்தவள் அவளை மேலும் காக்க வைக்காமல் முகாமைத்துவ மாணவர்கள் அழைத்து தேவாரம் பாடச் சொன்னது, பிறகு நீல சேர்ட்காரனுக்கு ஐ ல் யூ சொல்லச் சொல்லி ஏசினது. அழுது கொண்டே போய்ப் பார்க்க ஸாம் நீல சேர்ட்டோடு இருந்தது. பின் தான் நிரோஜனுக்கு பூக் கொடுத்தது என்று அனைத்து சம்பவங்களையும் சொல்லி முடித்தாள்.

ஆர்வத்துடன் கேட்டவள், “நீ செய்ததுதான் சரி அக்கா... ஸாம் அண்ணா தன்ர வாயால சொல்லுற வரைக்கும் நீ வாய் திறக்காதை... நீ ஏன் வழிஞ்சு கொண்டு போகோணும்... அவரா வரட்டும்...” என்று பெரிய மனுசியாக தமக்கைக்கே அறிவுரை சொன்னவள்,

“ஸாம் அண்ணாட பிளானா இருக்குமோ? உன்னை சொல்ல வைக்கிறதுக்கு?” என்று தன் சந்தேகத்தைக் கேட்டாள்.

“இல்லடி... என்னைக் கண்டதும் அவரும் முதல் திகைச்சுப் போனார். நம்பேலாமல்தான் நின்றார். அதால அவரிட ஐடியா இல்லை. நான் நினைக்கிறன் அவரோடகூட சுத்துற மற்ற மூணு வானரங்களிட வேலையா இருக்கும். என்னை முதலே கண்டிட்டு மற்ற பொடியளிட்ட சொல்லி இருக்கிறாங்க போல” என்று சரியாகவே ஊகித்தாள் கவி.

“அதுசரி... உங்கட பக்கல்டில ராக் பண்ணேலையோ?”

“இல்லடி... இவங்கள் நல்லா மினக்கெடுத்திப் போட்டாங்கள்... நாங்கள் போக ஒறியென்டேசன் புறோக்கிறாம் தொடங்கிட்டு... நாளைக்கு இனி யாரிட்ட மாட்டுறமோ?” என்று ஒரு பெருமூச்சை வெளியேற்றினாள் கவி.

“அதெல்லாம் இனி கவலைப்படாத அக்கா... ஸாம் அண்ணா இனி பத்திரமா உன்னை பாத்துக் கொள்ளுவார்...”

அருணியின் பேச்சுக்கு ஆமோதிப்பாய் தலை அசைத்தாள் கவி. அவள் மனதினுள்ளும் அதே எண்ணம்.

“அக்காவும் தங்கையும் ரகசியம் கதைச்ச காணும்... ரெண்டு பேரும் சாப்பிட வாங்கோ... இஞ்சருங்கோ... நீங்களும் வாங்கோ... உந்த பேப்பரை பிறகு வாசிக்கலாம்தானே... வீட்டுக்கு வந்தாலே மாறி மாறி ஒவ்வொரு பேப்பரா கத் தூக்கிடும் இந்த மனுசன்”

தெய்வநாயகியின் குரலுக்கு அனைவரும் சாப்பாடு மேசைக்குச் சென்றனர். இரவு உணவு அனைவரும் சேர்ந்து உண்பது அந்த வீட்டின் எழுதப்படாத சட்டம்.

புட்டும் சுறா மீன் குழம்பும் சுறா வறையும் கவிக்கும் சந்திரஹாசனுக்கும் பரிமாறி விட்டு முட்டைப் பொரியலும் இடித்த கட்டைச் சம்பலும் அருணிக்குப் பரிமாறினார். ஆம். என்னதான் அருண்யாவோடு எப்போதும் சண்டை போட்டாலும் அவளுக்கு பிடித்த உணவுகளை சளைக்காமல் செய்து பரிமாறுவார்.

அவளுக்கு மீன் பிடிக்காது என்று சம்பலும் செய்து முட்டையும் பொரித்திருந்தார். அனைவரும் சாப்பிடவே தெய்வநாயகி கவியை மெதுவாக,

“ஏன் பிள்ளை... பொடியள் ஏதும் உன்னை அழ வைச்சவங்களே... ஒண்டும் பிரச்சினை இல்லத்தானே... மாமாட்ட ஒரு வார்த்தை சொல்லி வைக்கவே... உன்னை கவனமாக பாக்கச்சொல்லி...” என்று ஒரு அன்னைக்கே உரிய கவலையுடன் கேட்டார்.

“இல்லம்மா... அதெல்லாம் பெருசா ஒரு பிரச்சினையும் இல்ல... நீங்கள் மாமாவிடம் ஒண்டும் சொல்ல வேண்டாம்...”

தன்னவன் அங்கே இருக்கும் போது வேறு யார் அவளைக் காப்பாற்றிட முடியும்? தெய்வநாயகியின் அண்ணன் யாழ்.பல்கலைக் கழகத்தில்தான் விரிவுரையாளராகப் பணியாற்றுகிறார்.

அவ்வளவு நேரமும் அமைதியாக இருந்த சந்திரஹாசன் வாயைத் திறந்தார்.

“கவி! சனிக்கிழமை உம்மட உடுப்பு சாமான் எல்லாம் கொண்டு போய் றூம்ல வைப்பம். அஞ்சலிட்டயும் சொல்லும். அதுவரைக்கும் நான் கொண்டு போய் விடுறன்”

“ஓகேப்பா... ஆனால், நாங்க பஸ்ல போய் வாறம். .. நாலு நாள் தானேப்பா... நீங்களும் ஒபிஸ்க்கு போற. வீணாக அலைய வேணாம்” என்று தந்தையின் நேரம் தவறாத கடமை உணர்ச்சி தெரிந்து சொன்னாள்.

“பஸ்ஸில இடிபட்டுக் கொண்டு போகப் போறியேம்மா?” கவலையுடன் கேட்ட தாய்க்கு,

“எல்லா பிள்ளையளும் போகுதுகள் தானேம்மா... காரில போறது கண்டால் அதுக்கு தனியா ராக் பண்ணுவாங்கம்மா...” என்று பதிலுரைத்தாள் கவி.

(மலரும்...)

நிப்தாஸ் அஹமத்

சிறுகதை

# ஓவியம் உறங்குகின்றது



“இலைகள், மரப்பட்டைகள், மலர்கள், மண் ஆகியவற்றிலிருந்து வண்ணங்கள் தயாரித்தே அக்காலத்தில் ஓவியங்கள் வரையப்பட்டன” என்ற முதலாம் பக்கத்தில் உள்ள மூன்றாம் பந்தியை வசித்துக் கொண்டிருக்கும் போது அவனின் தந்தையின் இருமல் சத்தம் கேட்டு புத்தகத்தை மூடி தலையணைக்குக் கீழே ஒழித்துவிட்டான் நீயானாகி.

அவனின் பெயர் போன்று அவனும் வித்தியாசமானவன். ஓவியம் வரைதலில் அசாத்திய திறமை படைத்தவன். ஆனால், என்னவோ அவனின் ஓவியங்களை யாரும் ஏறெடுத்தும் பார்ப்பதில்லை பார்த்தாலும் பொறாமை வழியும் நாவுகள் கடும் சொற்களைக் கக்கும். நீயானாகியை இந்தப் பிரபஞ்சத்திலே வாழ்த்த ஒரு ஜீவன் இருக்குமேயானால் அவன் உயிர்த் தோழி ஒருத்தி உண்டு அவள் மாத்திரமேதான். அவளும் நீயானாகி போன்று ஓவியப் பித்து பிடித்தவள். நீயானாகியின் ஓவியங்களுக்கு கிடைக்கும் மனதை நொறுக்கும் விமர்சனங்களை எண்ணி நீயானாகியோடு சேர்ந்து அங்கலாய்ப்பாள்.

ஆனால், அவையோ நீயானாகிக்கு பழகிப்போன பழங்கஞ்சி. நீயானாகியும் அவன் உயிர்த் தோழியும் ஓவியங்கள் பற்றி அதிகம் பேசிக் கொள்வார்கள் அவன் தோழி “லியானாடோ டாவின்சி” யின் ஓவியங்கள் தனக்கு மிகவும் பிடிக்கும் என்றும் அதிலும் மோனாலிசா ஓவியத்தைவிட “இறுதி இராப்போசன விருந்து” தன்னை மிகவும் கவர்ந்தது எனவும் அதில் உட்பொதிந்துள்ள கதை நெஞ்சத்தை பிழிவதாகவும் சொல்லிக் கொள்வாள். ஆனால், நீயானாகிக்கோ பிக்காசோவின் ஓவியங்கள் என்றால் பித்து. பிக்காசோவின் ஓவியங்களில் வயதான கிட்டார் கலைஞர் ஒருவரை சித்த ரிக்கும் ஓவியத்தை பார்த்து பிக்காசோவின் தத்ரூபமான வரைதலைக் கண்டு இதேமாதிரியான ஓவியம் போல் நானும் வரைய வேண்டும் என எண்ணம் கொள்வான். பொதுவெளி போன்று அவன்வீட்டு சூழலும் அவன் திறமைக்குத் தடையாக இருந்தது. அவன் தந்தைக்கு அவன் ஓவியம் மீது காட்டும் நாட்டம் இம்மியளவும் விருப்பம் இல்லை.

ஒருமுறை நீயானாகி ஓவியம் வரைதலின் நுணுக்கங்கள் பற்றி கூறும் நூல் ஒன்றை வாங்கி வருமாறு தந்தையிடம் வேண்ட தந்தையோ கணித பாடம் சம்பந்தப்பட்ட புத்தகத்தை வாங்கி வந்து நீட்ட ஏமாற்றத்துடன் புத்தகத்தை வாங்கி மேசை மீது போட்டுவிட்டு பெருமூச்செறிந்தான். ஒருமுறை நீயானாகி அந்தப்புரத்து அழகிகள் குழுமி நிற்கும் ஓவியம் ஒன்றை வரைந்து பள்ளிக்கு எடுத்துச் சென்று நண்பர்களிடம் காட்டினான். அவனை ஏதோ காமுகனை பார்ப்பது போன்றும் செய்யத் தகாத தவறொன்றை செய்த பாவியாகப் பார்த்தனர். நீயானாகியோ அசுத்தம் நிறைந்த கண்களையுடையவர் மத்தியில் வாழ்தல் சாபம் என்று மனதைத் தேற்றிக் கொண்டான்.

ஓவியக் கலையுலகத்திற்கு தன் ஓவியங்களைக் கொண்டு சேர்க்க முடியாத ஆற்றாமையை எண்ணி அழுவான். இராக்கால கனாக்கள் தான் அவன் ஆசைகள் நிறைவேறும் உலகமாகக் காணப்பட்டது. இன்று நள்ளிரவிலும் நீயானாகி கனாக் கண்டு கொண்டிருக்கிறான்...

ஓவியக் கண்காட்சி ஒன்றில் நீயானாகி வரைந்த ஓவியங்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது. அவ் ஓவியங்கள் பற்றி பார்வையாளர்களுக்கு நீயானாகி விளங்கப்படுத்திக் கொண்டிருக்கிறான்..

மறுகணம்...

தட தட வென கதவு தட்டப்படும் சத்தம் கேட்கிறது,

வெளியிலே அவன் தந்தை...

“அதிகாலை நேரமாகி விட்டது இன்னும் என்ன தூக்கம் , எழும்பு தூங்கினது போதும் எழும்பி படி” தந்தையின் கட்டளைத் தொனி உச்சஸ்தாயில் ஒலிக்கிறது...

என்ன செய்வான் நீயானாகி...

இரவு வரைந்த ஓவியத்தை யாருக்கும் தெரியாமல் தான் தூங்கிய பஞ்சு மெத்தைக்குக் கீழே பதுக்கிவிட்டு எழும்பி செல்கிறான் நீயானாகி படிப்பதற்காக... நீயானாகியின் ஓவியங்கள் பஞ்சு மெத்தைக்கு கீழே நீண்ட துயில் கொள்கின்றன.

■

செந்தமிழ்ச்செல்வர் பாடும்மீன் சு.ஸ்ரீகந்தராசா

**திருக்குறளின் காமத்துப்பால் இலக்கணம் வகுத்துள்ள காதல் இலக்கியத்தின் இனிமையைப் பகிர்ந்துகொள்ளும் கட்டுரைத்தொடர்.**



# குறள் இன்பம் 25

“கண்விதுப்பு அழிதல்” என்ற தலைப்பிலான அதிகாரத்தில் உள்ள குறட்பாக்கள் ஒவ்வொன்றும் துணைவனின் பிரிவால் துக்கத்தில் ஆழ்ந்துள்ள மனைவியொருத்தி அனுபவிக்கும் வேதனையின் வெவ்வேறு முகங்களை நம் மனக்கண்முன் கொண்டுவந்து நிறுத்துகின்றன. இதுவரை அழுது புலம்புகின்ற கண்கள், நோயில் உழலும் கண்கள், கண்ணீர் வடிக்கும் கண்கள் என்பவற்றைக் காட்சிப்படுத்திய குறள்களைப் படித்தறிந்து கொண்டோம்.

இனி, கண்ணீர் வராமல் வறண்ட கண்கள், தூக்கம் இழந்து துயருறும் கண்கள், அழுது துடிக்கும் கண்கள், உள்ளே நீர் வற்றிவிட்ட கண்கள், காதலரைக் காணாமல் அமைதியின்றித் தவிக்கும் கண்கள், காதலர் வரா விட்டால் தூங்காமலும் வந்து விட்டால் தூங்கமுடியாமலும் துடிக்கும் கண்கள், காதல் வேதனையை ஊரவர்களுக்கு காட்டிக் கொடுக்கும் கண்கள் என்றிப்படி பிரிவுத்துயரால் அலமந்து துடிக்கும் ஒரு பெண் தன் கண்களின் பல்வேறு நிலைப்பாடுகளைப்பற்றி தோழிக்கு எடுத்துக்கூறும் குறட்பாக்களை அறிந்து கொள்வோம்.

**தாங்கவொண்ணாத நோயை தந்துவிட்டுத் தூங்கவொண்ணாது தவிக்கும் கண்கள்!**

**“பெயலாற்றா நீருலந்த உண்கண் உயலாற்றா**
**உய்வு இல்நோய் எங்கண் நிறுத்து” (1174)**

தப்பவும் முடியாமல் வாழவும் முடியாமல் என்னைத் துன்பப்படுத்துகின்ற இந்தக் காதல் நோய் எனக்கு வருவதற்குக் காரணமான, இந்த மையிட்ட கண்கள், இப்பொழுது தாங்களும் அழமுடியாமல் நீர்வரண்டு விட்டன. (கண்களுக்கு நல்ல தண்டனைதான்) என்று அவள் தோழியிடம் சொல்கிறாள்.

**“படலாற்றா பைதல் உழக்கும் கடலாற்றாக்**
**காமநோய் செய்தவென் கண்” (1175)**

“அளவில் கடலைவிடப் பெரியதாகிய காமநோயை எனக்குத் தந்து, என்னை துன்பத்தில் ஆழ்த்திய இந்தக் கண்கள், இப்பொழுது தாங்களும் தூங்கமுடியாதவாறு வருந்திக்கொண்டிருக்கின்றன” என்பது இதன் பொருள்.

தனக்கு துன்பத்தைத் தந்த கண்கள் தூங்க முடியாத வருத்தத்தில் இப்படி அழுதழுது துன்பப்படட்டும். அதுவும் நல்லதே என்று நினைக்கிறாள். கண்கள் படும் துன்பத்தைக் கண்டு நகைக்கிறாள், மகிழ்ச்சியடைகிறாள். கண்கள் அவளது உறுப்புகள் மட்டுமே. ஆனால், உணர்வுகளோடு போராடும் தனது உள்ளத்தையே அவள், தான் என்று கருதுகிறாள். “ஓ ஓ இனிதே!” என்ற சொற்கள் அவளது மகிழ்ச்சியை வெளிப்படுத்தி நிற்கின்றன. அத்துடன், தமிழின் இனிமையில் நம்மையும் மகிழவைக்கின்றன.

**“ஓஒ இனிதே எமக்கிந்நோய் செய்தகண்**
**தாஅம் இதற்பட் டது” (1176)**

“எனக்கு இந்தக் காமநோயைத் தந்த இந்தக் கண்கள், என்னைப்போன்றே துன்பப்பட்டு வருந்துவது மிகவும் இனிமைதான்” என்பது இதன் நேரடிக் கருத்தாகும்.

அவர் இப்போது வந்து என்னோடு சேரப் போவதில்லை. எனது நோயும் தீரப்போவதில்லை. வருந்திக்கொண்டிருப்பதுதான் நமது கதி என்று ஆகிவிட்டது. இனியென்ன? அவர் வருகிறபோது வரட்டும். காத்துக்கொண்டிருப்போம். எதிர்பார்த்துக் கொண்டிருப்போம். வேறென்ன செய்ய முடியும்? ஆனால், மனம் தாங்குதில்லையே! ஆனால் ஒன்று, அவரைக் கண்டபோது ஆசைகொண்டு, அவரோடு கூடிக் குலவிக் கொண்டாடிய இந்தக் கண்கள்தானே எனக்கு இந்த நோய் வரக் காரணமானவை? அதனால் அவை அழும்வரை அழட்டும். அழுது அழுது உள்ளிருக்கும் நீர் முழுவதும் வற்றிப் போகட்டும் என்று, சாபம் இடுவதைப் போலக் கோபத்துடன் தோழியிடம் சொல்கிறாள். உண்மையில் அது சாபமல்ல, தாபத்தின் வெளிப்பாடு. கோபமல்ல, சற்று அதிகமான ஊடல் அவ்வளவுதான். காதல் வாழ்வில் இவ்வாறான வார்த்தைப் பிரயோகங்கள் சாதாரணமானவை. காதலர்களின் இறுக்கமான காதல் உணர்வுகளுக்கு ஆதாரமானவை.

**“உழந்துழந் துள்நீர் அறுக விழைந்து இழைந்து**
**வேண்டி அவர்க்கண்ட கண்” (1177)**

அன்றைக்கு ஆசையுடன் என் காதலரைக் கண்டு அவருடன் கூடி மகிழ்ந்து குலவியவை தானே, அவருக்கு வேண்டிய இந்தக் கண்கள். இப்பொழுது அவரின் பிரிவுத்துயரால் வருந்தி உள்ளேயிருக்கும் நீரெல்லாம் வற்றிப் போகட்டும்! என்பது நேரடிக் கருத்து.

ஊடலின் விளிம்பில் நிற்கிறாள் அவள். அது கூடினால் கோபம். குறைந்தால் கூடல். கோபம் கூடிவிட்டால், இருவரில் ஒருவர் சமரசம் செய்ய வேண்டும். தவறிவிட்டால், அதுவே பெருத்த சண்டையாகிவிடும். இருவரும் அருகருகே இருந்தால் அப்படி நடக்கலாம். இங்கே காதலன் திரும்பிவந்துவிட்டாலே சமரசம் ஏற்பட்டு விடும். அதனால் காதலன் பிரிந்திருக்கும்போது ஏற்படும் கோபத்தின் எதிர்விளைவுகள் தீமையைத் தரமாட்டாதென்ற நம்பிக்கையில் அவளின் ஊடல் வார்த்தைகள் சற்றுச் சூடாகவே வருகின்றன.

“என்னை தன் உள்ளத்தால் விரும்பாமல், வெறும் வார்த்தைகளால் மட்டுமே காதலித்தவராகத்தான் என் கணவர் இருக்கிறார். அவரைக் காணாமல் இந்தக் கண்கள் அமைதியுறாமல் இருக்கின்றன. பிரிந்திருப்பதை விட்டுவிட்டு என்னிடம் திரும்பி வருவதற்கு விரும்பாத அவரைக் காண்பதற்குத்தான் இந்தக் கண்கள் முயல்கின்றன. இது சரியா?” என்று அவள் தோழியிடம் கேட்கிறாள்.

**“பேணாது பெட்டார் உளர்மன்னோ மற்றவர்க்**
**காணாது அமைவுஇல கண்” (1178)**

**பிரிந்தாலும் தூக்கமில்லை, இருந்தாலும் தூக்கமில்லை!**

அவளை வீட்டில் தனியே விட்டுவிட்டுப் பிரிந்து சென்ற கணவர் வரும்வரை பிரிவுத்துயரால், வருந்திக்கொண்டு அவள் இருக்கிறாள். அதனால் அவர் வரும்வரை அவளுக்குத் தூக்கம் வரவில்லை. சரி ஒருநாள் அவர் வந்துவிட்டால், அன்றுமுதல் தூக்கம் வருமா என்றால் அதுவும் முடியாது. அவரோடு கூடியிருப்பதற்காக நாள் முழுவதும் தூக்கம் வரவே வராது. இது அவளுக்குத் தெரியும். அந்த நினைவே அவளுக்கு இன்பமாக இருக்கிறது. ஒரு தனிச் சுகத்தைக் கொடுக்கிறது.

அதனால், இப்போது தன் கண்களில் ஒருவித பச்சாத்தாபம் வருகிறது அவளுக்கு. அந்த உணர்வில் அவள் தோழியிடம் சொல்லும் வார்த்தைகளும் இதமாக வெளிவருகின்றன.

என் கணவரின் பிரிவால் வருந்திக்கொண்டும், அவரைக் காணவேண்டும் என்ற விருப்பத்தால் அவரின் வரவை எதிர்பார்த்துக்கொண்டும் இந்தக் கண்கள் தூங்காமல்இருக்கும். அவர் வந்தபிறகு அவரோடு கலந்து இருப்பதற்காக விழித்திருக்கும். ஆக, அவர் பிரிந்து சென்றாலும் தூக்கமில்லை, திரும்பி வந்தாலும் தூக்கமில்லை என்ற நிலைமை தான் என் கண்களுக்கு என்று சொல்கிறாள்.

**“வாராக்கால் துஞ்சா வரின்துஞ்சா ஆயிடை**
**ஆரஞர் உற்றன கண்” (1179)**

கணவனைப் பிரிந்த துயரில், தாங்கொணாத காதல் நோயின் கொடுமையில் தவித்த அவளுக்குத் தன் கண்களே எதிரிகளாகப்பட்டன. தன்னில் இருந்து கண்களை வேறாக நினைத்து குற்றம் சாட்டினாள். பின்னர் தனது துன்பத்திற்குக் காரணமானதால் கண்கள் அழட்டும் என்றாள். கண்ணீர் வற்றிப் போகட்டும் என்றாள்.

தனது உள்ளம் துன்பத்தில் வருந்தும்போது, கண்கள் அழுகையால் கண்ணீர் மல்கும், அழுதழுது கண்ணீர் வற்றிப்போகும் வறண்டு உலரும் மகிழ்விழந்து வாடும் பொலிவிழந்து கிடக்கும் என்பதையெல்லாம் அவள் எண்ணிப் பார்க்கிறாள்.

தன்னைப் போலவே அவையும் துன்பப் படுகின்றன என்று இரக்கம் காட்டினாள். கணவரின் பிரிவிலும் தூங்காமல், வரவிலும் விழித்திருக்கும் கண்கள் தன்னிலிருந்து வேறானவையா? இல்லையே! அவரைக் காட்டிய கண்களல்லவா? என் கண்மணிகள் அல்லவா? என்று, இன்னும் அவர் வராதிருக்கும் நிலையிலும் இன்ப உணர்வில் எதிர்காலக் கனவில் அவள் மிதக்கிறாள்.

**“மறைபெறல் ஊரார்க்கு அரிதன்றால் எம்போல்**
**அறைபறை கண்ணார் அகத்து” (1180)**

“உள்ளத்தில் உள்ளவற்றைப் பறையடித்துக் காட்டிக் கொடுக்கக்கூடிய கண்களையுடைய நம்மைப்போன்ற பெண்களுக்கு, தம் காதல் வேதனையை ஊர்மக்கள் அறிந்துகொள்ளாமல் மறைப்பது அவ்வளவு சுலபமானதல்ல” என்பது இந்தக் குறளின் கருத்து.

**(தொடரும்)**

# வசந்தகால விடியல்

கசந்து போன விடியல்கள்
அன்றோடு
போகட்டும் வசந்தகால விடியல்கள்
மலரட்டும்
இதயத்திலே இன்னமுதாய்
தமிழையே அழகாக
இனியடர்த்தி வரும்பொழுதும்
நலமாக சிறக்கட்டும்

இழந்துவிட்ட உரிமைகள்
எழுச்சியோடு பெறவேண்டும்
கடந்துவிட்ட தோல்விகளை
நினைக்காத மனம் வேண்டும்
யாவரையும் எம்மினமாய் எப்போதும்
எண்ணவேண்டும்
தோல்வியென்ற ஒருவார்த்தை
தோற்றோடி மறையவேண்டும்

சிற்றெறும்பைக் கூடயிங்கே
ஓருயிராய் மதிக்கவேண்டும்
வெற்றிடமாய் மனமிங்கே இல்லாத
நிலைவேண்டும்
கனவினிலும் நினைவினிலும்
கனிவொன்றே இருக்கவேண்டும்

கண்களிலே கருணையேந்தி
காலமெல்லாம் வாழவேண்டும்



✍ வி.அபிவர்ணா
முல்லைத்தீவு

இப்படி உறுதியோடு
இறுதிவரை இருந்தாலே
வருகின்ற நாட்களிலே வசந்தகால
விடியல்களே
வாசலிலே காத்திருக்கும்
உணர்வீரே தமிழினமே
இனியாவது நம்புகழை
அவனியெங்கும் உரைப்பீரே!

# அம்மாவின் அன்பு

பத்து மாதம் சுமந்து
என்னை
பாசத்தோடு பெற்றெடுத்தாய்

பவளம் போல் பாதுகாத்து
முத்து முத்தாய்
பாசமும் தந்தாய்

துன்பத்திலும் இன்பத்தோடு
என்னை
வளர்த்தெடுத்தாய்

எட்டி நின்று தொட்டாலும்
உன் பாசத்திற்கு
ஈடாகுமா?



மழலை குரலால் நான்
பேசும் போது
அதை நீ
ரசித்தாய்

என் பிள்ளை என்று
நீ என் கன்னம்
முத்தம் இடும் போது
அதை நான் ரசித்தேன்

✍ அபி யது
உடுப்புக்குளம்

# சங்கமம்

நீ கடல் போல்
காத்திரு
என் அன்பே
என்னை அடைய

நான் நதியாக
பள்ளம் மேடு
எல்லாம் கடந்து
வரும் வழியில்

உனக்காக
அழகிய பூக்களை எல்லாம்
பறித்து வருவேன்
அன்பே

நீயும் நானும்
சங்கமிக்கும் வேளை
இருவரும்
மகிழ்ச்சி வெள்ளத்தில்
தத்தளிப்போம்!

✍ சனா



# நான் அனுபவசாலி

நான் மாறிவிட்டேன்
காலத்தின் கோலத்தில்
மாற்றிக்கொண்டேன்

உலகப் பிடியில் நானொன்றும்
சிக்கவில்லை
நான் உணர்வின் மடியில்
தவழ்ந்த ஞாபகம்
ஆதலால்தான் மாறிவிட்டேன்
என்கிறேன்

ஆசையை கொன்றுவிட்டேன்
ஆதலால்
பேராசைகளை பெறவேயில்லை

அன்பினை குறைத்துவிட்டேன்
ஆதலால்
பேரானந்தம் ஆச்சரியமில்லை

தனிமையில் பழகி விட்டேன்
ஆதலால் இருட்டொன்றும்
ரணங்கள் இல்லை

சிரிப்பினை அணிந்துவிட்டேன்
ஆதலால்
அழுகையை சுமப்பதில்லை

காதலால் பாடம் கற்றேன்
ஆதலால்
அடைமழைக்காய் வேண்டுவதில்லை

பச்சோந்தி வாழ்வில்லை
ஆதலால்
சில உறவுப் பூச்சிகளையும்
வளர்ப்பதில்லை

சுயநலமில்லா உறவு
எதுவென்று கேட்கிறேன்
முடிந்தால் சொல்லு மனிதா

நான் எவருமில்லை என்பேன்

நம்பி உடைந்துபோனேன்
வெம்பி உடல் மெலிந்தேன்

இனி என் காட்டில் ஏது
கண்ணீர் மழை
நான் ஞானி அல்ல
நான் அறிவாளி அல்ல
நான் குற்றவாளி அல்ல
நான் யார் தெரியுமா
நான் அனுபவசாலி

நானொன்றும் கற்பனையை



✍ இசை

பூசவில்லை
நானொன்றும்
கடுப்பினை பாய்ச்சவில்லை
நானொன்றும்
கட்டுக்கதை புகட்டவில்லை

என்னை தாராளமாக நம்பலாம்
இந்த உலகத்தில்
நான்கூட மாறலாம்
எப்படி
எந்தன் காயங்களை
மாற்றியது போல!

# அன்பே உனக்காக

என் அன்பே
உன்னை நினைத்துக்
கொண்டிருக்கும்
என்னை உனக்கு
நினைவுள்ளதா?

நான் இங்கு
உன் நினைவிலே
வாழ்கிறேன்

நாம் சந்தித்த
அந்த நாளை
இன்று

நினைத்தாலும்
என் இதயம்
சிறகடிக்கின்றது

நீ கேட்டால்
என் உயிரையும்
சிரித்தவாறே
உன் கையளிப்பேன்

என் வாழ்வின்
அர்த்தம் நீ
உன் வரவுக்காக
வழி மேல்
விழிவைத்து



காத்திருப்பேன்
உன் காதலனாக.

✍ விண்ணவன்
குமுழமுனை

# இதயமே... இதயமே...

இதயம் தொட்ட, இதயத்துக்கு நெருக்கமான, இதயத்தை நொறுக்கும்... இப்படி பல விடயங்களையும் இதயத்தோடு ஒப்பிட்டுப் பேசுகிறோம். அந்த அளவுக்கு இதயம் முக்கியத்துவம் பெறுகிறது. மனித உடலின் பிரதான உறுப்புகளில் ஒன்றான இதயம், தன் இயக்கத்தை நிறுத்திக்கொண்டால் மனித வாழ்க்கையும் முற்றுப்பெறுகிறது.

இதயத்தைப் பாதிக்கும் பிரச்சினைகள், அவற்றிலிருந்து நம்மைத் தற்காத்துக்கொள்ளும் வழிகள், இதய நோய்களின் அறிகுறிகள், அலெர்ட் ஆக வேண்டிய தருணங்கள்..

இதயம் என்பது யாதெனில்...

“மனித உடலின் மிக முக்கிய உறுப்புகளில் ஒன்று இதயம். இது நம் நெஞ்சுப் பகுதியில் இருக்கிறது. இது 500 முதல் 600 கிராம் அளவுக்கு சிறியதாகத்தான் இருக்கும். ஆனால், நம் பிறப்பு முதல் இறப்புவரை இதயம் தொடர்ந்து இயங்கிக் கொண்டேதான் இருக்கும்.



இடது, வலது என இதயத்தை இரண்டாகப் பிரிக்கலாம். அசுத்தமான இரத்தம், அதாவது ஆக்ஸிஜன் இல்லாத ரத்தம் வலது பக்க இதயத்துக்கு வரும். அதை அந்தப் பகுதி இதயமானது பம்ப் செய்து நுரையீரலுக்கு அனுப்பும். அங்கு போனதும், நாம் மூச்சை இழுப்பதால் அந்த இரத்தத்தில் ஆக்ஸிஜன் சேர்ந்து சுத்தமாகி இடது பக்க இதயத்துக்கு அனுப்பப்படும். இடது பக்க இதயத்திலிருந்து பம்ப் செய்யப்படுகிற இரத்தம்தான் உடலின் அனைத்து பாகங்களுக்கும் செல்லும். இந்தச் சுழற்சி நம் வாழ்நாள் முழுவதும் தொடரும்.

ஒவ்வொரு நிமிடமும் நம் இதயமானது 60 முதல் 72 முறை வரை துடிக்கும். இதயம் எந்த அழுத்தத்தில் இரத்தத்தை பம்ப் செய்கிறதோ, அதே அழுத்தத்தில் தான் இரத்தம் நம் மூளைக்கும் போகும். காலின் நுனி நரம்புக்கும் போகும். எனவே இதயச் செயல்பாட்டுக்கு இரத்த அழுத்தமும் முக்கியம், இதயத் துடிப்பும் முக்கியம்.

என்ன நோய்... எந்த டாக்டர்? 8- இதயமே... இதயமே...

மாரடைப்பு மற்றும் பல...

இதயத்தின் மேல் பகுதியில் கரோனரி எனப்படும் இரத்தக்குழாய்கள் இருக்கும். இதயத்தில் நான்கு வால்வுகளும் இருக்கும். இவை திறந்து, மூடியபடி இருக்கும். இடது, வலது பக்க இதயத்தைப் பிரிக்க நடுவில் ஒரு தடுப்பு இருக்கும். முதலில் சொன்ன இரத்தக்குழாய்களுக்குச் செல்லும் இரத்த ஓட்டத்தில் பாதிப்பு வந்தால் அதுதான் ஹார்ட் அட்டாக். வால்வுகள் திறந்து, மூடும் பணியைச் சரியாகச் செய்ய வேண்டும். 100 மில்லி இரத்தம் போக வேண்டிய இந்த வால்வில் 50 மில்லிதான் போகிறது, மீதி 50 மில்லி இரத்தம் கசிகிறது என்ற நிலையில் வால்வில் பிரச்சினை வரலாம். இதனாலும் இதய நலன் பாதிக்கப்படும்.

இதயத்தில் ஓட்டை விழுமா?

வலது பக்க இதயமும் இடது பக்க இதயமும் தனித்தனியே பிரியாமல் நடுவில் ஓட்டை இருந்தால் அசுத்தமான இரத்தமும் சுத்தமான இரத்தமும் ஒன்றாகக் கலக்க நேரும். இதன் காரணமாகவே பிறக்கும் போது சில குழந்தைகள் நீல நிறத்தில் இருப்பதைப் பார்க்கிறோம். இதைத்தான் இதயத்தில் ஓட்டை இருப்பதாகக் குறிப்பிடுகிறோம்.

இதயம் நிமிடத்துக்கு 72 முறை துடிப்பதை அறிவோம். இதயத்துக்கு உள்ளே ஒரு எலக்ட்ரிகல் லைன் இருக்கும். இதில் ஏதேனும் கோளாறு ஏற்பட்டால் இதயத்துடிப்பிலும் பிரச்சினை இருக்கும். 72 முறை துடிக்க வேண்டிய இதயம் 20 முறை துடிக்கும். தலைச்சுற்றி மயங்கி விழுவார்கள். 72 முறைக்கு பதிலாக 100 முறை, அதற்கு மேல் துடிக்கும்போதுதான் நெஞ்சு படபடப்பது போன்று உணர்வதாகச் சொல்வார்கள். இப்படி இதயத்தில் பல பிரச்சினைகள் வரலாம்.

இவையெல்லாம் இதய பாதிப்பை உணர்த்தலாம்..

நீரிழிவு, புகைப்பழக்கம், உயர் இரத்த அழுத்தம், பரம்பரையில் இதயக் கோளாறு... இவையெல்லாம் இருப்பவர்களுக்கு இரத்தக்குழாயில் பாதிப்பு வரலாம். எனவே இவர்கள் ரெகுலர் செக்கப் செய்து கொள்ள வேண்டியது முக்கியம். ஹார்ட் அட்டாக்கின் பிரதான அறிகுறி நெஞ்சுவலி. ஆனால் அது மட்டுமன்றி, சிலருக்கு தொண்டை வலி, தாடை வலி, இடது பக்க தோள்பட்டை மற்றும் கையில் வலி வரலாம். சாப்பிட்டு முடித்ததும் வயிற்றுவலி அல்லது ஏப்பம் வருவதுகூட மாரடைப்பின் அறிகுறியாக இருக்கக்கூடும்.

வால்வு கசிவு ஏற்படும்போது களைப்பு இருக்கும். மூச்சுவிடுவதில் சிரமம், கால் மற்றும் வயிற்றில் நீர்கோத்து வீங்கிக்கொள்ளும். முகம் வீங்கலாம்.

இதயத்தில் ஓட்டை இருக்கும் நிலையில் அசுத்த இரத்தமும் சுத்த இரத்தமும் கலப்பதால் உடல் நீலநிறமாக மாறும். மூச்சுத்திணறல் ஏற்படும். குழந்தையாக இருந்தால் பால் குடிக்க மாட்டார்கள், அதிகம் வியர்க்கும். விளையாட முடியாமல் சிரமப்படுவார்கள்.

இதயத் துடிப்பில் பிரச்சினை ஏற்படும்போது படபடப்பு, தலைச்சுற்றல், மயக்கம் வரலாம்.

ஹார்ட் வீக் ஆகுமா?

இதயத்துக்கென சராசரியாக பம்ப்பிங் திறன் ஒன்று உண்டு. அது சிலருக்கு சராசரியைவிட குறையும். ஹார்ட் அட்டாக், வால்வு பிரச்சினை உட்பட இதற்குப் பல காரணங்கள் இருக்கலாம். பம்ப்பிங் திறன் குறைவதைத் தான் ஹார்ட் வீக்காக இருப்பதாகக் குறிப்பிடுவோம். அதற்கான காரணம் அறிந்து சிகிச்சை அளிக்க வேண்டியிருக்கும். சாதாரண மருந்து மாத்திரை கொடுப்பதிலிருந்து, பேஸ் மேக்கர் வைப்பது, இதய மாற்று அறுவைச் சிகிச்சை வரை தீவிரத்தைப் பொறுத்து அதற்குப் பல தீர்வுகள் உள்ளன.

இதயம் பலவீனமானவர்களிடம் அதிர்ச்சியான, மகிழ்ச்சியான தகவல்களைப் பகிரக் கூடாதா என்ற கேள்வி பலருக்கு உண்டு. அதிகபட்ச உணர்வுகளை இவர்களால் தாங்க முடியாது என்பது உண்மைதான். எனவே சந்தோசமோ, துக்கமோ, அவர்களை அதிகம் உணர்ச்சிவசப்படுத்தும் விடயங்களைத் தாங்க முடியாமல் மயங்கி விழ வாய்ப்புண்டு.

ஹார்ட் அட்டாக்கும் உயிரிழப்பும்...

ஏற்கெனவே சொன்னபடி இதயத்துக்குச் செல்லும் இரத்தக்குழாய்களில் அடைப்பு ஏற்பட்டால் மாரடைப்பு வர வாய்ப்பு உண்டு. இந்த இரத்தக் குழாய்கள் எல்லோருக்கும் ஒரே மாதிரி இருக்க வேண்டிய அவசியமில்லை. இதயத்துக்குச் செல்லும் இரத்தக்குழாய்களில் எந்த இடத்தில் அடைப்பு ஏற்படுகிறதோ அதற்கேற்ப பாதிப்பு இருக்கும்.

இதயத்தின் பிரதான இரத்தக்குழாயில் அடைப்பு ஏற்பட்டால் அதை ‘மேஜர் அட்டாக்’ என்கிறோம். சிறிய இரத்தக்குழாயில் மட்டும் அடைப்பு ஏற்படும்போது பாதிப்பு குறைவாக இருக்கலாம். அப்படிப்பட்டவர்களுக்கு தனக்கு ஹார்ட் அட்டாக் வந்ததுகூட தெரியாமலிருப்பார்கள். சிலருக்கு லேசான நெஞ்சுவலி, புளித்த ஏப்பம் வந்திருக்கும். அதை வாயுத்தொல்லை என அலட்சியம் செய்திருப்பார்கள். பிற்காலத்தில் வேறு ஏதேனும் விடயத்துக்காக இசிஜி எடுக்கும் போதுதான் ஏற்கெனவே ஹார்ட் அட்டாக் வந்தது தெரியவரும். சிலருக்கு பிரதான இரத்தக் குழாயில் அடைப்பு ஏற்பட்டு இதயம் முழுவதும் பாதிப்புக்குள்ளாகும் நிலையில் அவர்கள் உயிர் பிழைப்பதே சிரமமாகும். பாதிப்பின் தீவிரம் குறைவாக இருக்கும் போது உயிர் பிழைத்து விடுவார்கள்.

ஹார்ட் அட்டாக்கா... கார்டியாக் அரெஸ்ட்டா?

இதயம் இயங்குவது முழுமையாக நின்று போவதுதான் கார்டியாக் அரெஸ்ட். இதை ஹார்ட் அட்டாக்குடன் குழப்பிக் கொள்ளக் கூடாது. இதயம் இப்படி முழுமையாகச் செயலிழப்பதற்குப் பல காரணங்கள் இருக்கலாம். ஹார்ட் அட்டாக் வந்ததால்கூட இப்படிச் செயலிழக்கலாம். இதயத்துடிப்பு குறைவதாலோ, அதிகரிப்பதாலோ கூட இதயம் வேலை செய்வது நின்றுபோகும்.

அலட்சியப்படுத்தக்கூடாத அறிகுறிகள்...

நெஞ்சுவலி, தோள்பட்டை வலி, தாடை வலி இருந்தால் மாரடைப்பின் அறிகுறிகளாக இருக்கலாம் என்பதால் உடனே மருத்துவரை அணுக வேண்டும்.

ரெகுலராக வாக்கிங் செல்பவராக இருப்பார். தினமும் 2 கி.மீ தூரம் நடக்கும் அவரால் திடீரென ஒரு கிலோமீற்றருக்கு மேல் நடக்க முடியாமல், ஓய்வெடுத்துவிட்டு நடக்க வேண்டி வந்தால் இதயத்தில் பிரச்சினை இருக்கக்கூடும். புளித்த ஏப்பம், சாப்பிட்டதும் ஏற்படும் நெஞ்சு, வயிற்று வலி போன்றவை அஜீரணத்தின் அறிகுறிகளாகவும் இருக்கலாம். இதயம் தொடர்பான பிரச்சினையின் அறிகுறிகளாகவும் இருக்கலாம். புகைப்பழக்கம் இருப்பவர்கள், நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம் உள்ளவர்களுக்கு இந்த அறிகுறிகள் வந்தால் உடனே மருத்துவரை அணுக வேண்டும்.

பெண்களுக்கும் ஹார்ட் அட்டாக் ஏன்?

ஆண், பெண் இருவருக்கும் ஹார்ட் அட்டாக் வரும். உடல் உறுதியோடு இருப்பது வேறு, தசை வலிமை என்பது வேறு. பாடி பில்டராக இருப்பார். ஆனால். அவரால் 2 கி.மீ ஓடக்கூட முடியாது. எனவே அவருடைய தாங்கும் திறன் என்பது முக்கியம். பாடி பில்டராகவோ, சிக்ஸ்பேக் வைக்காமலோ உள்ள ஒருவர் சர்வ சாதாரணமாக 5 கி.மீ ஓடுவார். எனவே தசை வலிமையைவிட உடல் உறுதிதான் முக்கியம்.

ஆண்களோடு ஒப்பிடும்போது பெண்களின் இரத்தக்குழாய்கள் சிறிதாக இருக்கும். அவர்களுக்கு மாரடைப்பு ஏற்பட அதுவே முக்கிய காரணம்.

என்ன நோய்... எந்த டாக்டர்? 8- இதயமே... இதயமே...

ஹார்ட் அட்டாக்கிலிருந்து மீண்ட பிறகு...

ஒருமுறை ஹார்ட் அட்டாக் வந்துவிட்டால் அவர்களுக்கு இரத்தக்குழாய்களில் அடைப்பு வந்ததை ஏற்றுக்கொண்டாக வேண்டும். அதன் பிறகு அவர்கள் புகைப்பழக்கத்தை அறவே நிறுத்த வேண்டும். இரத்தச் சர்க்கரை மற்றும் இரத்த அழுத்த அளவுகளைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க வேண்டும். உட்கார்ந்தபடியே வேலை செய்வோர், உடலியக்கத்தை அதிகப்படுத்த வேண்டும்.வாழ்வியல் மாற்றம் முக்கியம். கொழுப்பில்லாத உணவுப் பழக்கம் முக்கியம். ஹார்ட் அட்டாக்தான் வாழ்வின் இறுதி என அர்த்தமில்லை. வாழ்வியல் முறையில் மாற்றங்களைக் கடைப்பிடித்தால் மாரடைப்பு வந்து 10,20 ஆண்டுகள் கடந்தும் ஆரோக்கியமாக வாழலாம்.

இதய ஆரோக்கியத்துக்கு...

ரிஸ்க் காரணிகளை கவனிக்கவும். இரத்தச் சர்க்கரை, இரத்த அழுத்தம் கட்டுக்குள் இருக்க வேண்டும்.

உடல் பருமன் குறைக்கப்பட வேண்டும்.

உடலியக்கம் மிக மிக முக்கியம். உடற்பயிற்சிகள் அவசியம்.

40 வயதைக் கடந்த எல்லோருக்கும் இதய ஆரோக்கியத்துக்கான வருடாந்தர டெஸ்ட் அவசியம்.

இதய ஆரோக்கியம் அறிய பல டெஸ்ட்டுகள் உள்ளன. எக்கோ, இசிஜி, டிரெட்மில் ஆகிய மூன்று டெஸ்ட்டுகள் அவசியமானவை. பிரச்சினைகள் இருந்தால் 99 சதவிகிதம் இந்த மூன்றிலும் தெரிந்துவிடும். ரிஸ்க் காரணிகள் இருந்தாலோ, குடும்பப் பின்னணியில் இதய பாதிப்பு இருந்தாலோ, 50 ப்ளஸ் வயதில் இருந்தாலோ கரோனரி ஆஞ்சியோ கிராம் செய்ய வேண்டியிருக்கும்.


சிகிச்சைகள்...

தீவிரமற்ற இரத்தக்குழாய் அடைப்புக்கு மருந்து மாத்திரைகள் பரிந்துரைக்கப்படும். இவை அடைப்பை குணப்படுத்தாது. அடைப்பை மேலும் தீவிரப்படுத்தாமல் தடுக்கும். இது தவிர, பாதிக்கப்பட்ட நபரின் இரத்தக்குழாய் அடைப்பின் தீவிரத்தைப் பொறுத்து ஸ்டென்ட், வைப்பாஸ் போன்றவை தேவையா என முடிவு செய்யப்படும். ■


வடக்கின் ஓர் அடையாளம்
வடகடல் உப்பு ஆலை
NSSL
North Sea Salt Ltd
வடகடல் உப்பு
Varany
Kodikamam
Kachcheri
Maruthankerny
Pallai
Elephant Pass
Poonakary
கிளிநொச்சி
கருவாடு உப்பு பெற்றுக்கொள்ள தொடர்புகளுக்கு
0777133543
0767833799

# பூகம்பத்தின் அவலங்கள்






# ஜீவநதி முருகபூபதி சிறப்பிதழ்

வடபுலத்தில் அல்வாயிலிருந்து கடந்த பல வருடங்களாக வெளிவந்துகொண்டிருக்கும் ஜீவநதி கலை, இலக்கிய மாத இதழ், 2023 தைமாத வெளியீடாக, அவுஸ்திரேலியாவில் வதியும் படைப்பிலக்கியவாதியும் ஊடகவியலாளருமான முருகபூபதியின் வாழ்வையும் பணிகளையும் படைப்பிலக்கிய முயற்சிகளையும் பதிவுசெய்யும் வகையில் சிறப்பிதழை வெளியிட்டுள்ளது.

ஏற்கெனவே பல சிறப்பிதழ்களையும் கலை, இலக்கிய ஆளுமைகள் தொடர்பான சிறப்பிதழ்களையும் வரவாக்கியிருக்கும் ஜீவநதியின் ஆசிரியர் கலாமணி பரணீதரன், முன்னர் அவுஸ்திரேலியச் சிறப்பிதழையும் வெளியிட்டிருப்பவர்.

இவ்வருடம் தைமாதம் வெளியாகியிருக்கும் இலக்கிய ஆளுமை முருகபூபதி சிறப்பிதழில், கிறிஸ்ரி நல்லரெத்தினம், தாமரைச்செல்வி, காரைக்கவி கந்தையா பத்மநாதன், ஜெயபிரசாந்தி ஜெயபாலகேரம், கே.எம்.செல்வதாஸ், ஐங்கரன் விக்னேஸ்வரா, ருஸ்னா நவாஸ், சிவ ஆரூரன், பேராசிரியர் செ.யோகராசா, புலோலியூர் வேல் நந்தகுமார், அஷ்வினி வையந்தி, சிதம்பரப்பிள்ளை சிவக்குமார், வ.ந.கிரிதரன், த.கலாமணி, மகேந்திரராஜா பிரவீணன், புலோலியூர் ஆ.இரத்தினவேலோன் ஆகியோர், முருகபூபதி எழுதிய நூல்கள் பற்றிய வாசிப்பு அனுபவங்களுடன், முருகபூபதியின் தன்னார்வத் தொண்டு பணிகள் குறித்தும் எழுதியுள்ளனர்.

முருகபூபதியின் வாழ்க்கைக் குறிப்புகளும் இவ்விதழில் இடம்பெற்றுள்ளன.

பிரதிகளுக்கு : ஜீவநதி, கலைஅகம், சாமணந்தறை ஆலடிப் பிள்ளையார் வீதி, அல்வாய் வடமேற்கு, அல்வாய், இலங்கை.

மின்னஞ்சல்: jeevanathy@yahoo.com

# கண்ணீர் அஞ்சலி



எமது நண்பன் த.துவாரகனின் அன்புத் தந்தையார்

அமரர்

தர்மகுலம்

**தர்மதயாளன்**

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

தோற்றம் : 27.04.1956 மறைவு : 08.02.2023

ஆழ்ந்த துயரத்துடன்...

2008 A/L நண்பர்கள்
ஹாட்லிக் கல்லூரி

# துவண்டது துருக்கி சிதைந்தது...

(11 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

9,000 துருப்புக்களுடன் 12,000க்கும் மேற்பட்ட துருக்கிய தேடுதல் மற்றும் மீட்புப் பணியாளர்கள் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பணியாற்றி வருகின்றனர். சுமார் 70 நாடுகள் மற்றும் பணியாளர்கள், உபகரணங்கள் மற்றும் உதவிகளை அனுப்பியுள்ளது. சீனாவின் பேரிடர் மீட்புக் குழு அங்கு விரைந்துள்ளது.

துருக்கியின் அடானா விமான நிலையத்தில் டிரக்கில் உபகரணங்களை ஏற்றிய போது, ஜேர்மனியின் தீயணைப்பு மற்றும் மீட்பு சேவையைச் சேர்ந்த ஜோஹன்னஸ் கஸ்ட், இந்தப் பகுதி மிகப் பெரியது. இது போன்ற எதையும் நான் இதற்கு முன் பார்த்ததில்லை என்றார்.

நிலநடுக்கத்தில் 5,775 கட்டடங்கள் இடிந்து விழுந்ததாகவும் 20,426 பேர் காயமடைந்துள்ளதாகவும் துருக்கியின் பேரிடர் மற்றும் அவசரகால மேலாண்மை ஆணையம் தெரிவித்துள்ளது.

துருக்கியிலும் சிரியாவிலும் இடிந்து விழுந்த கட்டடங்களின் இடிபாடுகளுக்கு அடியில் புதையுண்ட மக்கள் அதிர்ச்சிகரமான காயங்கள், பசி, தாகம், பூஜ்ஜியத்திற்கு குறைவான வெப்பநிலை, சுவாசிக்க கடினமாக இருக்கும் தூசி, சேதமடைந்த எரிவாயு குழாய்களில் இருந்து தீ வெடிக்கும் அல்லது தண்ணீரில் மூழ்கும் அபாயத்தை இடிபாடுகளுக்குள் சிக்கி இருக்கும் மக்கள் அனுபவிப்பார்கள்.

உலகையே அதிர்ச்சிக்குள்ளாக்கிய இந்த பூகம் பத்தாக்கத்தில் இருந்து துருக்கியும் சிரியாவும் மீள்வதற்கு மிக நீண்ட காலம் எடுக்கும்.

உலக நாடுகள் தொடர்ந்து உதவி செய்ய வேண்டிய நிலை உள்ளது. ■

துருக்கியில் ஏற்பட்ட நிலநடுக்கத்தைத் தொடர்ந்து அங்கு மீட்புப் பணிகள் தீவிரமாக நடந்து வருகின்றன. இந்த மீட்புப் பணிகளின் போது நடந்த சம்பவம் ஒன்று மக்கள் இடையே வியப்பை ஏற்படுத்தியுள்ளது.

கட்டட இடிபாடுகள் ஒன்றை மீட்புப் படையினர் அகற்றி வந்துள்ளனர். 10 மாடி அடுக்கு கட்டடம் ஒன்றில் சிக்கி பலியான நபர்களின் உடல்களை பொலிஸார் ஒன்றொன்றாக அகற்றி வந்துள்ளனர். அப்போது கட்டடம் ஒன்றிற்கு கீழ் சிறுமி ஒருவர் சிக்கியபடி இருந்துள்ளார். அவருக்கு மேலே பெரிய சுவர் ஒன்று விழுந்த நிலையில் இருந்துள்ளது. அருகிலேயே அந்த சிறுமியின் தம்பியும் இருந்துள்ளார். இருவர் மீது அந்த சுவர் விழுந்தபடி கிடந்து இருக்கிறது.



அந்தச் சிறுமியை அதிகாரிகள் பார்த்த போது அவர் தனது தம்பியின் தலையின் மேல் கை வைத்தபடி பாதுகாப்பாக இருந்துள்ளார். தனது தம்பியின் தலையில் எதுவும் விழுந்துவிடாதபடி பாதுகாப்பாக இருந்துள்ளார். தன்னுடைய உயிர் போனாலும் கூட பரவாயில்லை என்று அந்தச் சிறுமி தனது தம்பிக்கு கேடயமாக இருந்துள்ளார். மொத்தம் 17 மணி நேரம் அந்தச் சிறுமி தனது தம்பிக்கு இப்படி பாதுகாப்பு அரணாக இருந்துள்ளார். மீட்புப் பணியினர் அவர்களை மீட்க வந்த போது, அந்தச் சிறுமி அவர்களை சிரித்தபடி வரவேற்று உள்ளார்.

அந்தச் சிறுமிக்கு அதிகபட்சம் 5 வயது தான் இருக்கும். அவரின் தம்பிக்கு 3 வயது இருக்கும். இருந்தாலும் பெரிய மனுஷி போல செயல்பட்டு, தனது உயிருக்கு அஞ்சாமல் அந்தச் சிறுமி தனது தம்பியை பொறுப்பாக காப்பாற்றி உள்ளார். அந்தச் சிறுமியை தற்போது துருக்கி ரியல் ஹீரோ என்று கூறி கொண்டாடி வருகிறது. அந்தச் சிறுமி அவரின் தம்பி இருவரும் நேற்று பாதுகாப்பாக மீட்கப்பட்டனர். அவர்களின் வீடியோ மற்றும் புகைப்படங்கள் இணையத்தில் வைரலாகி வருகிறது. ஐ.நாவில் பணியாற்றும் மீட்புப் படையினர் பலர் இந்த வீடியோவைப் பகிர்ந்து, இது போன்ற பாசிட்டிவ் விடயங்களையும் பகிருங்கள். இது மிகப் பெரிய நம்பிக்கையைக் கொடுக்கிறது என்று தெரிவித்து உள்ளனர்.



# பாசக்கார அப்பா ஷேன் வோன்

அவுஸ்திரேலிய முன்னாள் கிரிக்கெட் மறைந்தவீரர் ஷேன் வோனின் உயில் வெளியிடப்பட்டது. அவரது 20.7 மில்லியன் டொலர் சொத்துக்கள் அவரது குழந்தைகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

ஷேன் வோன் கடந்த மார்ச் மாதம் தாய்லாந்தில் 52 வயதில் மாரடைப்பால் உயிரிழந்தார். அவுஸ்திரேலிய கிரிக்கெட் ஜாம்பவான் தனது சொத்துக்களில் தலா 31 சதவீதத்தை தனது மூன்று குழந்தைகளான ஜாக்சன், புரூக், சம்மர் ஆகியோருக்கு விட்டுச் சென்றதாக விக்டோரியாவில் உள்ள உச்சநீதிமன்றம் வெளியிட்ட ஆவணங்கள் கூறுகின்றன. எஞ்சியதை அவரது சகோதரர் ஜேசன், அவரது சொத்தில் இரண்டு சதவிகிதமும் மற்றும் அவரது மருமகள் டைலா மற்றும் மருமகன் செபாஸ்டியன் ஆகியோருக்கு இடையே இரண்டரை சதவிகிதமும் சொத்துக்கள் பிரித்து தரப்பட்டுள்ளன.

வார்னின் வாகனங்கள் - ஒரு யமஹா மோட்டார் பைக் டீஆறு மற்றும் Mercedes ஆகியவை ஜாக்சனுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றின் மதிப்பு மட்டும் 3லட்சத்து 75 டொலர் என மதிப்பிடப்பட்டுள்ளது.

பிரபல நட்சத்திரமும் அவரது மனைவியுமான சிமோன் கலாஹன் மற்றும் அவரது முன்னாள் மனைவி லிஸ் ஹர்லிக்கு அவரது சொத்தில் எதுவும் வழங்கப்படவில்லை.

அவரது 20.7 மில்லியன் டொலர் சொத்துக்களில் 6.5 மில்லியன் டொலர் மதிப்புள்ள விக்டோரியாவில் உள்ள அவரது வீடும் அவரது அவுஸ்திரேலிய வங்கிக் கணக்கில் 5 மில்லியன் டொலரும் இருந்தன. அவரின் மற்றொரு வங்கிக் கணக்கில் 5 லட்சம் டொலரும் பங்குகளில் கிட்டத்தட்ட 3 மில்லியன் டொலரும் வைத்திருந்தார். அவரது மற்ற சொத்துக்களில் மிகவும் கவனம் பெற்ற சொத்து என்றால் அது 2 மில்லியன் டொலர் மதிப்புள்ள ஸ்கை ஜெட் ஒன்றாகும்.

ஷேன் வோனுக்கு, வங்கி உள்ளிட்ட பல்வேறு நிதி நிறுவனங்களுக்கு செலுத்த வேண்டிய 2லட்சத்து 95 ஆயிரம் டொலர் மதிப்பிலான கடனும் இருந்துள்ளது.

ஓய்வுக்குப் பிறகு, சேனல் 9 மற்றும் ஃபாக்ஸ் கிரிக்கெட் ஆகியவற்றுக்கான வர்ணனையாளராகவும் ஒளிபரப்பாளராகவும் பணியாற்றினார். ■

# கோல் கீப்பரின் இறுதிப்பட்டியல்



ஆடவர் உதைபந்தாட்ட விருதுப் பட்டியலில் ஆர்ஜென்ரீனாவின் எமிலியானோ மார்ட்டினெஸ், மொராக்கோவின் யாசின் பவுனோ, பெல்ஜியத்தின் திபாட் கோர்டோயிஸ் ஆகியோரின் பெயரை பீபா அறிவித்துள்ளது.

எமி மார்ட்டினெஸ் பெனால்டி ஷூட்அவுட்களில் ஆர்ஜென்ரீனாவின் ஹீரோவாக உயர்ந்தார், ஒரு முறை இரண்டு முறை அல்ல, காலிறுதியில் நெதர்லாந்து வீரர்களின் பெனால்ரியைத் தடுத்தார். இறுதிப் போட்டியில் நடப்பு சம்பியனான பிரான்ஸூக்கு எதிராக பெனால்டி ஷூட்அவுட்டில் இரண்டைக் காப்பாற்றினார்.

யாசின் பவுனோ இன் கோல்கீப்பிங்கால் மொராக்கோ 2010 உலக சம்பியனான ஸ்பெயினை பெனால்டியில் வெளியேற்றியது, அதேநேரத்தில் கிறிஸ்டியானோ ரொனால்டோவின் பெனால்ரியைத் தடுத்தார். இரண்டாவது பாதியின் பிற்பகுதியில், போர்த்துக்கலை நொக்அவுட் செய்தார். ■

## உலகக்கிண்ண நூற்றாண்டு விழாவை நடத்த

# தென் அமெரிக்கா ஆர்வம்




உலகக்கிண்ண உதைபந்தாட்ட நூற்றாண்டு விழாவை நடத்துவதற்கு ஆர்ஜென்ரீனா, சிலி, உருகுவே, பராகுவே ஆகியவை அதிகார பூர்வ கூட்டு முயற்சியை கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பித்தன. 2030 ஆம் ஆண்டு உலகக்கிண்ண நூற்றாண்டுவிழா நடைபெற உள்ளது. 1930 ஆம் ஆண்டு உருகுவேயில் நடைபெற்ற உலகக்கிண்ண உதைபந்தாட்ட இறுதிப்போட்டியில் ஆர்ஜென்ரீனாவை எதிர்த்து விளையாடிய உருகுவே 4-2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. 2030 ஆம் ஆண்டு உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியை இணைந்து நடத்துவதற்கு ஆர்ஜென்ரீனாவும் உருகுவேயும் சுமார் 15 வருடங்களுக்கு முன்னர் அறிவித்தன. இப்போது சிலி,பராகுவே ஆகிய நாடுகளும் இணைந்துள்ளன. உலகக் கிண்ணப் போட்டியை நடத்த பொலிவியாவை தங்களுடன் சேருமாறு நான்கு நாடுகளும் கேட்க உள்ளன. 1930 ஆம் ஆண்டு நடைபெற்ற முதலாவது உலகக் கிண்ணப் போட்டியில் பொலிவியா பங்கேற்றது.

“முதல் உலகக் கோப்பையை ஏற்பாடு செய்தவர்களின் நினைவை போற்ற வேண்டிய கடமை பீபாவுக்கு உள்ளது என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம்” என்று கான்மெபோல் தென் அமெரிக்க கூட்டமைப்பின் தலைவர் அலெஜான்ட்ரோ டொமிங்குஸ் ஆர்ஜென்ரீனாவில் கூறினார்.

ஸ்பெயின், போத்துக்கல், உக்ரைன் ஆகிய நாடுகளும் 2023 உலகக்கிண்ணப் போட்டியை நடத்த விரும்புகின்றன. இதேவேளை சவுதி அரேபியா எகிப்து, கிரீஸ் போட்டியில் இணைந்துள்ளன.

உருகுவே 1930 இல் மான்டிவீடியோவில் நடத்திய 13 அணிகள் கொண்ட உலகக் கோப்பையின் இறுதிப் போட்டியில் ஆர்ஜென்ரீனாவை 4-2 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி முதல் உலக சம்பியனானது. கடந்த ஆண்டு கட்டாரில் நடந்த போட்டியில் பிரான்ஸை வீழ்த்திய ஆர்ஜென்ரீனா, நடப்பு சாம்பியனாக உள்ளது.

அடுத்த உலகக் கிண்ணப் போட்டி 2026 இல் அமெரிக்கா, மெக்சிக்கோ, கனடா ஆகிய நாடுகள் இணைந்து நடத்த உள்ளன. ■




# ஐரோப்பிய வில்வித்தை சாம்பியன்ஷிப் போட்டி ஒத்திவைப்பு

துருக்கிய நகரமான சாம்சுனில் பெப்ரவரி 13 முதல் 18 வரை நடத்த திட்டமிடப்பட்ட ஐரோப்பிய வில்வித்தை உட்புற சாம்பியன்ஷிப்கள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன. கொடிய நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் துருக்கிய வில்வித்தை கூட்டமைப்பின் உறுப்பினருக்கும் தனது “ஆழ்ந்த இரங்கலை” உலக வில்வித்தை ஐரோப்பா அனுப்பியுள்ளது.

துருக்கியில் பெப்ரவரி 11 முதல் 19 வரை நடைபெறவிருந்த குளிர்கால ஜிம்னாசியாடை ரத்து செய்ய சர்வதேச பள்ளி விளையாட்டு கூட்டமைப்பு முடிவு செய்ததை அடுத்து ஐரோப்பிய வில்வித்தை உள்ளரங்க சாம்பியன்ஷிப் ஒத்திவைக்கப்பட்டது. திங்களன்று (பெப்ரவரி 6) நாட்டின் தெற்கில் உள்ள கஹ்ராமன்மாராஸ் மாகாணத்தில் நிலநடுக்கம் ஏற்பட்டதைத் தொடர்ந்து, துருக்கியின் ‘இளைஞர் மற்றும் விளையாட்டு அமைச்சர்’ மெஹ்மத் கசாபோக்லு, துருக்கியில் அனைத்து விளையாட்டு நடவடிக்கைகளையும் மறு அறிவிப்பு வரும் வரை நிறுத்தி வைத்தார். ■

இப் பத்திரிகையானது பருத்தித்துறை வீதி, நெல்லியடியில் அமைந்துள்ள Needa media corporation (PVT) LTD இனால் 11.02.2023 அன்று வெளியிடப்பட்டது.